

# 2022

# වාර්ෂික වාර්තාව

# வருடாந்த அறிக்கை

# ANNUAL REPORT

**ශ්‍රී ලංකා ජාතික ඉංජිනේරු පර්යේෂණ සහ සංවර්ධන මධ්‍යස්ථානය**
**இலங்கைத் தேசிய பொறியியல் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிலையம்**
NATIONAL ENGINEERING RESEARCH AND DEVELOPMENT CENTRE OF SRI LANKA

අධ්‍යාපන අමාත්‍යාංශය
**கல்வி அமைச்ச**
**Ministry of Education**

# உள்ளடக்கம்


| தலைப்பு | பக்க இலக்கம் |
|---|---|
| 1. சட்டங்கள், சட்டவாக்கம், கூட்டுத்தாபன நிருவாகம் | 01 |
| 2. தூரநோக்கு, செயற்பணி, குறிக்கோள்கள், கூட்டுத்தாபன விழுமியங்கள் | 03 |
| 3. பணிப்பாளர்கள் சபை மற்றும் நிறுவனக் கட்டமைப்பு | 07 |
| 4. தலைவரின் செய்தி | 10 |
| 5. பணிப்பாளர் நாயகத்தின் செய்தி | 13 |
| 6. உயர் முகாமைத்துவ மற்றும் நிறைவேற்று பதவியணி | 15 |
| 7. மனித வளங்கள் முகாமைத்துவம் | 20 |
| 8. 2022 ஆம் ஆண்டிற்கான செயலாற்றுகைக் குறிப்புகள் | 26 |
| 9. நிறுவனத்தின் நிதி மீளாய்வு - 2022 | 37 |
| 10. கடந்த 10 ஆண்டு காலப் பகுதியில் அடைந்த நிதி சாதனைகள் | 59 |
| 11. கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்களின் பதிவுகள் | 61 |
| 12. 2022 திசம்பர் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை | 63 |
| 13. கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை தொடர்பான பணிப்பாளர்கள் சபையின் அவதானிப்புகள் | 72 |



01.

# சட்டங்கள், சட்டவாக்கம், கூட்டுத்தாபனத் தகவல்

இலங்கையின் தேசிய பொறியியல் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிலையம் (NERDC) 1957 ஆம் ஆண்டின் 49 ஆம் இலக்க அரச கைத்தொழில் கூட்டுத்தாபனங்கள் சட்டத்தின் ஒழுங்குவிதிகளுக்கு இணங்க 1974 ஆம் ஆண்டு தாபிக்கப்பட்டது. தற்போது இது கல்வி அமைச்சின் கீழ் இயங்குகின்றது. NERDC நிலையம் மேற்குறித்த சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்டுள்ள முதன்மையான நிறுவனங்களில் ஒரு நிறுவனமாகும். உள்நாட்டு பொறியியல் தொழில்நுட்ப ஆராய்ச்சி தொழிலின் அபிவிருத்தியை மேம்படுத்துவதும் வசதியளிப்பதும் இதன் முக்கிய குறிக்கோளாகும். இந்த நிலையம் ஜா-எல, ஏகல, கைத்தொழில் பேட்டையில் தாபிக்கப்பட்டுள்ளது.

## அலுவலக முகவரி

2P/17 B, கைத்தொழில் பேட்டை
ஏக்கல, ஜா-எல
இலங்கை

## தொடர்புகொள்ளக்கூடிய தொலைபேசி இலக்கங்கள்

+ 94-011-2236284
+ 94-011-2236384
+ 94-011-2236307
+ 94-011-5354597

## வங்கியாளர்கள்

- இலங்கை வங்கி, ஜா-எல
- இலங்கை வங்கி, கூட்டுத் தாபனக் கிளை

## கணக்காய்வாளர்கள்



கணக்காய்வாளர் நாயகம்
கணக்காய்வாளர் நாயகத்தின் திணைக்களம்



## 02.

## தூரநோக்கு, செயற்பணி, குறிக்கோள்கள், கூட்டுத்தாபன விழுமியங்கள்

## தூரநோக்கு

நற்காசிய பிராந்தியத்தில் பொறியியல் ஆராய்ச்
அபிவிருத்தியில் ஒரு சிறப்பு கேந்திர நிலையம
திகழ்தல்„

## நோக்கம்

"இலங்கையில் சமூகப் பொருளாதார அபிவிருத்திற்கு பொறியியல் வசதிகளை வழங்குதல்"

## செயற்பணி

"இலங்கையின் சமூகப் பொருளாதார அபிவிருத்தியில் நேரடியாக தாக்கத்தை செலுத்தக்கூடிய பொறியியல் தொழில்நுட்பங்களை பெற்றுக் கொள்வதற்கும், அபிவிருத்தி செய்வதற்கும், பிரயோகிப்பதற்கும், பரிவர்த்தனை செய்வதற்கும் ஆராய்ச்சி அபிவிருத்தி செயற்பாடுகளில் ஈடுபடும் வேளையில் ஊழியர்களினதும் அக்கறையுடைய தரப்புகளினதும் புத்தாக்கத் திறமையையும் ஆக்கபூர்வத் திறமையையும் பயன்படுத்த நிறுவனத்தினுள் பொருத்தமான ஒரு கலாச்சாரத்தை உருவாக்குதல்"

# குறிக்கோள்கள்

1957 ஆம் ஆண்டின் 49 ஆம் இலக்க கைத்தொழில் கூட்டுத்தாபன சட்டத்தின் பிரகாரம் பின்வரும் நோக்கங்களுக்காக கைத்தொழில் நிறுவனம் தாபிக்கப்பட்டுள்ளது.

1. இலங்கையின் புத்தாக்கத் திறமையையும் ஆக்கப்பூர்வத் திறமையையும் ஊக்குவித்தல், அங்கீகரித்தல் மற்றும் அபிவிருத்தி செய்தல் ஆகியவற்றின் மூலம் உள்நாட்டு தொழில் நுட்பத்தின் முற்போக்கான அபிவிருத்திற்குத் தேவையான நிறுவன பொறிமுறையை வழங்குதல்.

2. கூட்டுறவு முயற்சியின் ஊடாக பயனுள்ள ஒரு விதத்தில் பல்வேறு பொது மற்றும் தனியார் துறை கைத்தொழில்களினதும் மற்றும் நிறுவனங்களினதும் தொழில்நுட்ப, பொறியியல் மற்றும் ஆராய்ச்சி திறன்களை ஒருங்கிணைக்க வசதியளித்தல்.

3. நாட்டின் வளங்களுக்கும் மற்றும் தேசிய திட்டமிடல் நோக்கங்களுக்கும் ஒத்துப்போகும் தொழில்நுட்பங்களின் தெரிவை தழுவி உறுதிசெய்தல்.

4. தேவையான போதெல்லாம் தொழில்நுட்ப பரிமாற்றத்தின் நேரடி மற்றும் மறைமுக பொறிமுறையை ஆராய்ந்து இலங்கையில் உள்ள பொருத்தமான அரச மற்றும் தனியார் நிறுவனங்களுக்கு ஆலோசனை வழங்குதல்.

5. பொருத்தமான தொழில்நுட்பத்தின் வளர்ச்சியை ஊக்குவிப்பதன் மூலம் நாட்டின் மனித வளங்களினதும் மூலப்பொருள் வளங்களினதும், குறிப்பாக தொழில்களினதும் மற்றும் மூலப்பொருள் வளங்களினதும் உகந்த பாவனையை ஊக்குவித்தல்.

6. தொழில்துறை, வணிக மற்றும் பிற இறுதிப் பயனர்கள் சிக்கனமான முறையில் கோரும் முன்மாதிரி இயந்திரங்களையும், முன்னோடி பொறித்தொகுதிகளையும் வடிவமைத்தல், தயாரித்தல் மற்றும் சோதனை செய்தல்.

7. சர்வதேச நிறுவனங்களினதும் தேசிய நிறுவனங்களினதும் ஒத்துழைப்பின் ஊடாக பொறியியல் வடிவமைப்புகளும் மற்றும் ஆராய்ச்சியும் தொடர்பான தொழில்நுட்ப தரவு மற்றும் ஆவணப்படுத்தல் ஆகியவற்றின் நிமித்தம் தொடர் கண்காணிப்பை வழங்குதல்.

8. பொது மற்றும் தனியார் துறை நிறுவனங்களுக்கு நிலையான நீடித்த ஆலோசனை சேவைகளை வழங்குதல், நாட்டின் பொறியியல் மற்றும் தொழில்துறை வடிவமைப்பு மற்றும் ஆராய்ச்சி திறன்களின் தளத்தை விரிவுபடுத்துவதற்காக ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நடவடிக்கைகளை மேம்படுத்துதல்.

9. மேற்கூறிய விடயங்கள் தொடர்பான பொறியியல், ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு ஆகியவற்றுடன் தொடர்புடைய நோக்கத்திற்காக ஏற்பாடு செய்தல்.

## கூட்டுத்தாபன விழுமியங்கள்

NERDC குழுவாகிய நாம், எமது தேசத்தின் நல்வாழ்வுக்கு பங்களிக்க தரமான தயாரிப்புகளையும், தொழில்நுட்பங்களையும், சேவைகளையும் வழங்குவதற்கு எம்மை அர்ப்பணித்துள்ளோம். எமது தனிப்பட்ட மற்றும் பெருநிறுவன இலக்குகளை அடைய உயர் நெறிமுறை நியமங்கள் அவசியம் என நாம் நம்புகின்றோம். ஆகையால், பொறியியல் ஆராய்ச்சியிலும் அபிவிருத்தியிலும், எமது குழுவுக்கான NERDC அர்ப்பணிப்பின் முக்கிய விழுமியங்களிலும், வாடிக்கையாளர்களிலும், ஏனைய அக்கறையுடைய தரப்புகளிலும் மற்றும் சமுதாயத்திலும் சிறப்பு நிலையை அடைய உயர் செயல்திறன் வாய்ந்த கலாச்சாரம் அவசியமாகும்.



### எமது வாடிக்கையாளர்கள்

- தரமான காலத்திற்குகந்த தயாரிப்புகள், தொழில்நுட்பங்கள் மற்றும் சேவைகள்
- வழமையான தொடர்பாடலின் ஊடாக வலுவான உறவுகளை நீடிக்கச்செய்தல்
- மிதமிஞ்சிய மரியாதை, விநயம் மற்றும் நேர்மை

### அக்கறையுடைய தரப்புகள் மற்றும் சமுதாயம்

- நிலைபெறுதகு அபிவிருத்தி
- கூட்டு சமூகப் பொறுப்பு
- பெறுமதி சேர்த்தலுக்கு அர்ப்பணித்தல்

### எமது பதவியணி

- சாகாசமான, ஆக்கபூர்வ, புத்தாக்க மற்றும் தாராள மனப்பான்மையுடன் இருத்தல்
- தொடர்ச்சியான கற்றல், வளர்ச்சி மற்றும் தொழில் சாதனைகள் என்பவற்றை தொடர்ந்து பேணுதல்
- சாதக மனோபாவ குழுப்பணி
- உயர் செயலாற்றுகை மற்றும் கற்றல் சூழல்
- தொழில்வான்மை, வெளிப்படை விழுமியங்களை போஷித்தல்
- நேர்மை, சமூக ஒழுக்கத்திற்கான பொறுப்பு



# 03.
# பணிப்பாளர்கள் சபை மற்றும் நிறுவனக் கட்டமைப்பு

## தலைவர்

**பேராசிரியர் எஸ்.யூ. அதிகாரி**
BSc.பொறியியல் (கௌரவ பட்டம்), MSc, PhD, C.பொறியியல், MIESL
(2022/11/03 ஆம் திகதி முதல்)

**பேராசிரியர் லீலானந்த ராஜபக்ஷ**
PhD, MEng, BScபொறியியல், E பொறியியல், FIMechE, MASHRAE, MIIAR, MIESL
(2022/11/02 ஆம் திகதி வரை)

**திரு கே.ஏ.எஸ்.எஸ்.கே. பெரேரா**
MBA, PGDip, BA (கௌரவ பட்டம்)
(2022/11/03 ஆம் திகதி முதல்)

**பொறியியலாளர் கபில தொடம்கொட**
MA பொருளியல், FCMA, CMA அங்கத்தவர் (Ans),
CGMA, B.Sc பொறியியல், AMIESL, MCIM, MSLIM
(2022/11/03 ஆம் திகதி முதல்)

**திருமதி எச்.எம்.டி.என்.கே. வட்டலியத்த**
Msc
(2022/09/30 ஆம் திகதி முதல்)

**திரு ஜே. யோகராஜா**
B.Sc (கணனி விஞ்ஞான விஷேட பட்டம்),
பட்டப்பின்படிப்பு (உயர் தகவல் தொழில்நுட்பம் IT) ஜப்பான்
(2022/09/30 ஆம் திகதி முதல்)

**திரு எஸ். பிரசாத் ஜயமான்ன**
M.Sc. கணனி விஞ்ஞானம் - பின்பற்றுகின்றார்
M.Sc. பிரயோக இலத்திரனியல்
B.பொறியியல் (கௌரவ பட்டம்) மெக்காட்ரோனிக்ஸ்
B.Sc பிரயோக விஞ்ஞானம்
(2022/09/30 ஆம் திகதி முதல்)

**திரு எம்.எச்.பீ. சரத் குமார**
BA (கௌரவ பட்டம்) பொருளியல்,
MSSC (பொருளியல்),
பட்டப்பின்படிபப்பு டிப்ளோமா (சுற்றாடல் மற்றும் Regi. Dev.)
(2022/09/30 ஆம் திகதி முதல்)

**திரு எஸ்.ஏ.டி. திலக் பிரேமலால்**
(2022/11/03 ஆம் திகதி முதல்)

**திருமதி எச்.டி.என்.கே. ஹெட்டிஆராச்சி**
MSc அபிவிருத்திக் கற்கைகள்
(2022/02/22 ஆம் திகதி முதல்)

# இலங்கை தேசிய பொறியியல் ஆராய்ச்சி அபிவிருத்தி நிலையம்

## நிர்வாகக் கட்டமைப்பு (ஆட்சேர்ப்பு நடைமுறைக்கு இணங்க)





04.

# தலைவரின் செய்தி



நாட்டின் முதன்மையான பொறியியல் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி அமைப்பான இலங்கையின் தேசிய பொறியியல் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிலையத்தின் (NERDC) தலைவர் என்ற வகையில், 2022 ஆண்டிற்கான வருடாந்த அறிக்கையை முன்வைப்பதில் மகிழ்ச்சி அடைகின்றேன். NERDC 1974 ஆம் ஆண்டு தாபிக்கப்பட்டது. இலங்கையின் சமூகப் பொருளாதார அபிவிருத்தி நிமித்தம் பொறியியல் வசதிகளை வழங்குவதை முதன்மை நோக்கமாகக் கொண்டு இது கிட்டத்தட்ட ஐந்து தசாப்தங்களுக்கு முன்னர் தாபிக்கப்பட்டது. அன்றிலிருந்து, NERDC பொறியியல் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி (R-D) கருத்திட்டங்கள், முன்னோடிக் கருத்திட்டங்கள், வணிகக் கருத் திட்டங்கள், ஆலோசனை சேவைகள், கைத்தொழில்களுக்கான தொழில்நுட்ப சேவைகள், தொழில்நுட்பத்தை பிரபலப்படுத்துதல், மாணவர்களுக்கும் மக்களுக்கும் மத்தியில் விஞ்ஞான மற்றும் தொழில்நுட்பக் கல்வியை ஊக்குவித்தல் முதலிய கரும பணிகளில் ஈடுபட்டு வருகின்றது.

கைத்தொழில்துறை உற்பத்தித்திறனை மேம்படுத்துதல், வளங்களை வினைத்திறன் வாய்ந்ததாக பயன்படுத்துதல், கண்டுபிடிப்பாளர்களினதும் தொழில்நுட்ப பணியாளர்களினதும் திறனை மேம்படுத்துதல், சுய வேலை வாய்ப்புகளை உருவாக்குதல், புத்தாக்க தொழில்நுட்ப தீர்வுகளை வழங்குதல் முதலியன நாட்டின் சமூக-பொருளாதார அபிவிருத்திற்கு NERDC பொறியியல் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிலையம் நல்கும் முக்கிய பங்களிப்பாகும்.

இலங்கையின் விவசாயத்தில் இரசாயன உரங்களின் பாவனையை இல்லாதொழிப்பதற்கான அரசாங்கத்தின் முயற்சிக்கு இணங்க, நாடு முழுவதும் கரிம உரங்களைப் பயன்படுத்தி "வளமான நோக்கங்களின்" மூலம் வழங்கிய வழிகாட்டல்களை பின்பற்றி, இயற்கையான உர உற்பத்திக்கு தேவையான இயந்திரங்களை உருவாக்கும் கருத்திட்டத்தை NERDC ஆரம்பித்தது. இது நாட்டின் தற்போதைய விவசாய நிலப்பரப்பு பற்றிய ஒரு விசாரணையில் சம்பந்தப்பட்டுள்ளது.

இலங்கையின் ஆராய்ச்சி மற்றும் புத்தாக்க இராஜாங்க அமைச்சின் பணிப்புரைகள் பிரகாரமும், இலங்கையின் அதிமேதகு ஜனாதிபதியின் வழிகாட்டல் பிரகாரமும், தேசிய பொறியியல் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிலையம் (NERDC) ஒரு ஒட்சிசன் செறிவூட்டி முன்னோடி அலகை வெற்றிகரமாக உருவாக்கி அபிவிருத்தி செய்துள்ளது. ஒட்சிசன் செறிவூட்டி என்பது ஒரு மருத்துவ சாதனமாகும். இது சூழலில் இருந்து காற்றை உள்வாங்கி, மூலக்கூறு சல்லடைகளின் படுக்கைகள் வழியாக நோயாளிக்கு பிரசவத்திற்காக அறை ஒட்சிசன் சிகிச்சை நிலைகளுக்கு கடத்துகின்றது. தேசிய விஞ்ஞான தினத்தை முன்னிட்டு நடைபெற்ற விழாவில் அதிமேதகு ஜனாதிபதிக்கு அதனை வழங்கி வைத்ததன் பின்னர், இணைக்கப் பரிசோதனைக்காக இந்த உபகரணங்கள் உயிரியல் மருத்துவ ஆராய்ச்சி நிறுவகத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

NERDC நிலையத்தின் சக்தி மற்றும் சுற்றாடல் சேவைகள் பிரிவு, கைத்தொழிற்சாலைகள், வணிக நிறுவனங்கள், அரச நிறுவனங்கள் போன்றவற்றில் உள்ள சக்தி முறைமைகள், தொழில்துறை செயல்முறைகள் மற்றும் சதூழல் முறைமைகள் என்பவற்றை கண்காணித்தல், கட்டுப்படுத்துதல், மேம்படுத்துதல் மற்றும் நிர்வகித்தல் மற்றும் காற்றின் தரம், கழிவுநீருக்கான நிலையான சோதனை வசதிகளை வழங்குதல் மற்றும் குளிர்சாதன பெட்டிகள், மின் விளக்குகள் மற்றும் வாகனங்களின் பற்றரிகள் என்பவற்றுக்கு சோதனை வசதிகளை வழங்குதல் என்பன போன்ற செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ளது. இது ISO17025:2017 அங்கீகாரம் பெற்ற ஆய்வகங்களுடன் கழிவு நீர் பகுப்பாய்வு, ஒலி அளவு அளவீடுகள், காற்றின் தர அளவீடுகள், மின் விளக்குகள் சோதனை மற்றும் குளிர்சாதன பெட்டி சோதனை ஆகியவற்றின் நிமித்தம் இயங்கி வருகின்றது. 2022 ஆம் ஆண்டு காலப் பகுதியில் இந்தப் பிரிவு 549 சேவைகளை கைத்தொழில்களுக்கு வழங்கி அதன் மூலம் 23.6 மில்லியன் ரூபா வருமானத்தை ஈட்டியுள்ளது.

அபிவிருத்தி செய்த தொழில்நுட்பங்களை பிரபலப்படுத்தவும், நாடு முழுவதும் பொருத்தமான தொழில்முனைவோருக்கு தொழில்நுட்பங்களை பரிமாற்றம் செய்யவும், 2022 ஆம் ஆண்டு காலப் பகுதியில் உள்வாரி மற்றும் வெளிவாரி பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள், விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் செயல்விளக்க நிகழ்ச்சித்திட்டங்கள் போன்ற பல நிகழ்ச்சித்திட்டங்களை இந்த நிலையம் செயற்படுத்தியுள்ளது.

நிறுவனத்தின் இலக்குகளையும் குறிக்கோள்களையும் அடைய பங்களிப்பையும் சேவைகளையும் நல்கிய பணிப்பாளர்கள் சபைக்கும், சிரேஷ்ட முகாமைத்துவத்திற்கும், பொறியியல் தொழில் நுட்ப பதவியணிக்கும், ஏனைய துணைப் பதவியணிக்கும் எனது நன்றியை தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றேன்.

பேராசிரியர் எஸ்.யூ. அதிகாரி
தலைவர்



# 05.

# பணிப்பாளர் நாயகத்தின் செய்தி



2022 ஆம் ஆண்டிற்கான இலங்கையின் தேசிய பொறியியல் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிலையத்தின் (NERDC) சிறப்பான செயல்திறனை உங்களுடன் பகிர்ந்து கொள்வதில் நான் மகிழ்ச்சியடைகின்றேன்.

எமது நாட்டின் முதன்மையான பொறியியல் R-D நிறுவனமாக விளங்குகின்ற NERDC, பல சவால்களை சந்தித்திருந்த போதிலும் புத்தாக்க R-D செயற்பாடுகளை விடாமுயற்சியுடன் முழுமையாக மேற்கொண்டு கடந்த 12 மாத காலமாக கைத்தொழில்துறை சேவைகளை வழங்கி வருகின்றது. இந்த உறுதியான அர்ப்பணிப்பு பொறியியல் சிறப்பை முன்னேற்றுவதற்கான NERDC இன் மீட்புக்கும் அர்ப்பணிப்புக்கும் முக்கிய அங்கமாக இருந்து வந்துள்ளது.

NERDC தேசிய தேவைகளை அடையாளப்படுத்த 2022 ஆம் ஆண்டில் கூட்டு ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திக் கருத் திட்டங்களில் தீவிரமாக ஈடுபட்டுள்ளது. பல்வேறு ஆற்றல் கொண்ட துண்டாக்கிகளை உருவாக்குதல், கரிம உர உற்பத்தியை எளிதாக்குவதற்கான உர சுழல் சாதனங்கள் மற்றும் மீனவ சமூகத்திற்கு பயனளிக்கும் மாசி உலர்த்தியின் வெற்றிகரமான முன்னோடி கருத் திட்டம் ஆகியவை குறிப்பிடத்தக்க சாதனைகளாகும். இந்த சாதனைகள், NERDC வழங்கும் கைத்தொழில்துறை மற்றும் ஆலோசனை சேவைகளுடன், நாட்டின் பொறியியல் மற்றும் அபிவிருத்தி துறைகளில் நிறுவனத்தின் குறிப்பிடத்தக்க பங்களிப்பைக் காட்டுகின்றன.

முன்னோக்கிப் பார்க்கும்போது, NERDC, R-D விடய அம்சத்தில் அதன் வளமான வரலாற்றைக் கொண்டுள்ளது. தொழில்துறை ஒத்துழைப்பு மற்றும் ஒருங்கிணைப்பு மூலம் எமது நாட்டிற்கான பொருளாதார நன்மைகளின் தொடர் முன்னேறுவதற்கு தேவையான வளங்களும் தகவமைப்பு திறனும் எமக்கு உள்ளது நான் நம்புகின்றேன்.

கலாநிதி ஜயது ஜி. சமரவிக்ரம
பணிப்பாளர் நாயகம்



06.

# உயர் முகாமைத்துவம் மற்றும் நிறைவேற்று பதவியணி

## பணிப்பாளர் நாயகம்

**கலாநிதி ஜயது ஜி. சமரவிக்ரம**
B.Sc. பொறியியல் (மொரட்டுவ), M.Sc. (மொரட்டுவ),
Ph.D. (UNIGE மற்றும் IIT, இத்தாலி), MIEEE
(2022/11/11 ஆம் திகதி முதல்)

nghwp. B B Mde;j ehky
MEng. (Energy Technology), BSc Eng. (Hon), CEng., MIE (SL)
(2022/11/10 ஆம் திகதி வரை)

## பிரதிப் பணிப்பாளர் நாயகம் (ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி)

பொறியியலாளர் ஜே.ஏ.ஏ.டீ. ஜயசூரிய
ME பொறியியல், BSc பொறியியல், MIE (SL)

## பிரதிப் பணிப்பாளர் நாயகம் (சேவைகள்)

பொறியியலாளர் ஏ.ஏ.எஸ்.பி. ஜயசிங்க
MBA, BSc பொறியியல் (கௌரவ பட்டம்), CE பொறியியல், MIE (SL)

## ஆராய்ச்சி சகபாடி

பொறியியலாளர் (திருமதி) என்.ஜி.டீ. விஜேஸ்ரீவர்த்தன
ME பொறியியல், CE பொறியியல், FIE (SL)

பொறியியலாளர் டப்ளியூ.கே.ஆர். பீரிஸ்
MA (பௌத்த கற்கை), BSc பொறியியல், CE பொறியியல் MIE (SL)

பொறியியலாளர் இ.ஏ.என்.கே. எதிரிசிங்க
MPHIL, BSC பொறியியல், MIE (SL)

பொறியியலாளர் கே.ரீ. ஜயசிங்க
ME பொறியியல், BSc பொறியியல், C பொறியியல், MIE (SL)

## NERDC பிரிவின் பொறியியல் மற்றும் நிறைவேற்றுப் பதவியணி

### சிவில் பொறியியல் பிரிவு (CED)

**பணிப்பாளர் (தொழில்நுட்ப)**
பொறியியலாளர் ஜே.ஏ.சி. கிரிஷாந்தி
ME பொறியியல், BSc பொறியியல், C பொறியியல், MIE (SL)

**ஆராய்ச்சி பொறியியலாளர்**
பொறியியலாளர் ஐ.பி. பட்டுவிட்ட
ME பொறியியல், BSc பொறியியல, AMIE (SL)

பொறியியலாளர் ஏ.என்.எஸ். அமரதாச
BSc பொறியியல், C பொறியியல், MIE (SL)

**பொறியியலாளர்**
திருமதி கே.எஸ்.எஸ். வீரசிங்க
விஷேட பயிலுநர் (சிவில் பொறியியல்), IESL (பகுதி I)
(2022.09.30 ஆம் திகதி வரை)

### விவசாய பொறியியல் மற்றும் இயந்திர அபிவிருத்தி பிரிவு (AE-MD)

**பணிப்பாளர் (தொழில்நுட்ப)**
பொறியியலாளர் கே.வை.எச்.டீ. சாந்த
MSc பொறியியல், BSc பொறியியல், AMIE (SL)

**பிரதான ஆராய்ச்சி பொறியியலாளர்**
பொறியியலாளர் ஏ.ஆர்.சி. சல்காது
BSc பொறியியல், AMIE (SL)

பொறியியலாளர் ஏ.ஜே.ஜி.எஸ். தஹநாயக்க
BSc பொறியியல், C பொறியியல், MIE (SL)

கலாநிதி ஏ.பி.டீ. லியனகே
PhD, MSc, BSc

**சிரேஷ்ட ஆராய்ச்சி பொறியியலாளர்**
கலாநிதி ரீ.என். பெர்னாந்து
PhD, B தொழில்நுட்பம், AMIE (SL)

**ஆராய்ச்சி பொறியியலாளர்**
திரு ஏ.பீ.எம்.எல்.பீ. அபேகோன்
BSc பொறியியல் (2022.10.09 ஆம் திகதி வரை)

### சக்தி மற்றும் சுற்றாடல் பொறியியல் பிரிவு (ENED)

**பதில் பிரிவுத் தலைவர்**
**பிரதான ஆராய்ச்சி பொறியியலாளர்**
பொறியியலாளர் எஸ்.எஸ்.எம்.டீ.கே. நாணயக்கார
ME பொறியியல், PG டிப்ளோமா, BSc பொறியியல், AMI (SL)

**பிரதான ஆராய்ச்சி பொறியியலாளர்**
பொறியியலாளர் எச்.எம்.எல்.யூ. ஹேரத்
BSc பொறியியல், AMIE (SL)

**சிரேஷ்ட ஆராய்ச்சி பொறியியலாளர்**
கலாநிதி எஸ்.எம். பத்திரன
PhD, MSc, BSc, AMIE (SL)

**ஆராய்ச்சி பொறியியலாளர்**
பொறியியலாளர் பி.எஃப்.எஸ். பெரேரா
BSc பொறியியல், M பொறியியல், AMIE (SL)

**பொறியியலாளர்**
திரு டப்ளியூ.ஏ.எல்.எஸ். கருணாவர்த்தன
HNDE

### மின்சார மற்றும் இலத்திரனியல் பொறியியல் பிரிவு (ELED)

**சிரேஷ்ட ஆராய்ச்சி பொறியியலாளர்/பிரிவுத் தலைவர்**
திரு என்.எஸ்.கே. சமரசிங்க
MSc, BSc பொறியியல், AMIE (SL)

**பிரதான ஆராய்ச்சி பொறியியலாளர்**
பொறியியலாளர் யூ.சி. பொதெஜு
BSc பொறியியல், CE பொறியியல், MIE (SL)

**சிரேஷ்ட ஆராய்ச்சி பொறியியலாளர்**
பொறியியலாளர் (திருமதி) ஏ.ஜி.எம்.ரீ. ஸ்ரீவர்த்தன
MSc, ME பொறியியல், BSc பொறியியல், AMIE (SL)

திரு டீ.ஏ.எம்.எஸ்.கே. ஹேமஸ்ரீ
MSc. BSc பொறியியல்

**ஆராய்ச்சி பொறியியலாளர்**
பொறியியலாளர் (திருமதி) டீ.ஆர்.எஸ்.கே. விமலரத்ன
B தொழில்நுட்பம் (கௌரவ பட்டம்), AMIE (SL)

பொறியியலாளர் வை.எஸ்.பி. வீரசிங்க
B தொழில்நுட்பம் AMIE (SL)

பொறியியலாளர் எச்.கே.ஐ.எஸ். லக்மால்
BSc பொறியியல், AMIE (SL) (2022/03/03 ஆம் திகதி வரை)

## எந்திர பொறியியல் பிரிவு (MED)

**பிரதான ஆராய்ச்சி விஞ்ஞானி/பிரிவுத் தலைவர்**
கலாநிதி ரீ.ஏ. சுரங்க அனுருத்த
PhD, MSc. BSc (IT)

**பிரதான ஆராய்ச்சி பொறியியலாளர்**
பொறியியலாளர் எச்.பி.எச். குமார
MSc பொறியியல், EC (UK) பகுதி I மற்றும் II, AMIE (SL)

பொறியியலாளர் எஸ்.எம்.எஸ்.எஸ். செனவிரத்ன
MSc பொறியியல், B தொழில்நுட்பம், AMIS (SL)

**ஆராய்ச்சி பொறியியலாளர்**

பொறியியலாளர் டப்ளியு.எம்.எஸ்.பி.கே. வனசிங்க
B தொழில்நுட்பம், AMIE (SL)

பொறியியலாளர் ஐ.டீ.எம்.எச். ஜயந்த
BSc பொறியியல், AMIE (SL)

## சக்தி மற்றும் சுற்றாடல் சேவைகள் பிரிவு

**ஆராய்ச்சி பொறியியலாளர்/பிரிவுத் தலைவர்**
பொறியியலாளர் ரீ.கே. கீகனகே
MSc, BSc பொறியியல், AMIE (SL)

**சிரேஷ்ட ஆராய்ச்சி பொறியியலாளர்**
பொறியியலாளர் (திருமதி) என்.பி.ரீ. பெரேரா
MSc, BSc பொறியியல் (கௌரவ பட்டம்), AMIE (SL)

**ஆராய்ச்சி பொறியியலாளர்**
பொறியியலாளர் எம்.டீ. சஹர்தீன்
BSc பொறியியல், AMIE (SL)

பொறியியலாளர் கே.பி.டீ.டீ. ஜயசேக்கர
BSc பொறியியல் (கௌரவ பட்டம்), AMIE (SL)

பொறியியலாளர் (திருமதி) ஜி.எஸ்.ஆர் கொஸ்தா
ME பொறியியல், BSc பொறியியல், AMIE (SL)

பொறியியலாளர் எச்.ஏ.கே. ஹப்புஆராச்சி
BSc பொறியியல், AMIE (SL)

**பொறியியலாளர்**
திருமதி எச்.டீ.சி. ஹெட்டிஆராச்சி
NDT

## அபிவிருத்தி மற்றும் கருத்திட்டப் பிரிவு (DPD)

**பணிப்பாளர் (தொழில்நுட்ப)**
பொறியியலாளர் கே.எல். மீதெனிய
MSc பொறியியல், BSc பொறியியல், C பொறியியல், MIE (SL)

**பிரதான ஆராய்ச்சி பொறியியலாளர்**
பொறியியலாளர் டப்ளியு.டப்ளியு.பி.கே. பெரேரா
M பொறியியல், BSc பொறியியல் (கௌவ பட்டம்), C பொறியியல், MIE (SL)

பொறியியலாளர் எஸ்.டீ.எஸ்.பி. சோலங்கஆராச்சி
MSc, BSc

**சிரேஷ்ட ஆராய்ச்சி பொறியியலாளர்**
பொறியியலாளர் எம்.ஏ.டீ.எஸ். பிரேமதாச
MBA, BSc, AMIE SL

**சிரேஷ்ட ஆராய்ச்சி விஞ்ஞானி (கட்டடக்கலை)**
திருமதி பீ.டீ.ஆர். சாமிகா
MSc, BSc. பட்டய கட்டடக்கலை AIA (SL)

**பொறியியலாளர்**
திருமதி டீ.எம்.ஏ.கே. தீகல
விஷேட பயிலுநர் (சிவில் பொறியியல்), IESL (**பகுதி** I)

திரு பி.ஏ.யு.டப்ளியு.கே. பரணகம்பொள
NDES

## தொழில்நுட்ப சந்தைப்படுத்தல் பிரிவு (TMD)

**சிரேஷ்ட ஆராய்ச்சி பொறியியலாளர்/பிரிவுத் தலைவர்**
பொறியியலாளர் பி.எம்.வை.எஸ். பத்திராஜ
MSc பொறியியல், BSc பொறியியல், AMIE (SL)

**ஆராய்ச்சி பொறியியலாளர்**
பொறியியலாளர் (திருமதி) ஜே.கே.ஐ.பி. ஜயசிறி
BSc பொறியியல், AMIE (SL)

**ஆராய்ச்சி விஞ்ஞானி**
திருமதி பீ.டீ.பி.எஸ். ரணவீர
MSc, BSc

**உதவிப் பணிப்பாளர் - சந்தைப்படுத்தல்**
திருமதி பி.என்.டீ. பத்திரண
BSc (கௌரவ பட்டம்) Sp. MCIM (UK), MSLIM (SL)

## தொழில்நுட்ப பெருக்கி

**சிரேஷ்ட ஆராய்ச்சி பொறியியலாளர்**
பொறியியலாளர் எஸ்.ஏ.பி. சாலிந்த சில்வா
BSC பொறியியல், MENG, CENG, MIE (SL)

**ஆராய்ச்சி பொறியியலாளர்**
பொறியியலாளர் சுரேஷ் பி. பெரேரா
CE பொறியியல் (UK), MIMechE (UK), NDT, AMIE (SL)

பொறியியலாளர் எஸ்.எம்.வி.பி.டீ. சேனாநாயக்க
BSc பொறியியல், AMIE (SL)

திரு எச்.பீ.எல்.எச். குணசேக்கர
BSc பொறியியல் (2022/10/12 ஆம் திகதி வரை)

| பராமரிப்பு அலகு மற்றும் மத்திய வேலைப்பட்டறை | தொழில்நுட்ப பேட்டை மற்றும் பொறியியல் நூதனசாலை |
|---|---|
| **பொறியியலாளர்**<br>திரு என்.ஏ.டீ.டீ.ஜே. பிரசன்ன<br>NDT | **மேற்பார்வையாளர் - தொழில்நுட்ப பேட்டை**<br>திரு டப்ளியூ.கே.சி.பி. வல்பொல<br>BSc<br><br>**மேற்பார்வையாளர் - பொறியியல் நூதனசாலை**<br>திருமதி டீ.கே. ஜயவீர<br>BSc (கௌரவ பட்டம்) |
| **மனித வளங்கள் அபிவிருத்தி பிரிவு (HRD)** | **நிதிப் பிரிவு (FD)** |
| **பணிப்பாளர் (மனித வளங்கள்)**<br>திருமதி டீ.ஏ.எம். முணசிங்க<br>MBA (HRM) , BSc (HRM), AM (CIPM) | **பணிப்பாளர் (நிதி)**<br>திரு ஜே.எம்.ஆர்.எஸ். ஜயசிங்க<br>MBA, BBA Sp., CPFA, ICASL - பேராசிரியர் பகுதி I<br>(2022/09/29 ஆம் திகதி வரை) |
| **தகவல் தொழில்நுட்ப அலகு** | |
| **வலையமைப்பு கட்டுப்பாட்டாளர்**<br>திரு பீ.பி. விக்ரமசூரிய<br>MSc, BSc (கணனி மற்றும் தகவல் முறைமை) | **நூலகர்**<br>திருமதி டீ.எம்.ரீ.பி.கே. தேவகிரி<br>MMSc , B A (நூலக விஞ்ஞானம்) Sp., ASLLA |
| **உள்ளகக் கணக்காய்வு அலகு** | **பெறுகை அலகு** |
| **உள்ளகக் கணக்காய்வாளர்**<br>திரு பீ.பி.எஸ். குமார<br>MPM, HNDA | **வழங்கல் உத்தியோகத்தர்**<br>திரு ஆர்.எச்.ஏ. ஜீவானந்த<br>BSc (பௌதீக விஞ்ஞானம்) |



07.

# மனித வளங்கள் முகாமைத்துவம்

# மனித வளங்கள்

மனித வளம் என்பது ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிறுவனங்களின் இலக்குகளையும் மற்றும் நோக்கத்தையும் சிறந்த செயலாற்றுகையின் மூலம் நிறைவேற்றுகின்ற அவற்றின் முக்கியமான சொத்தாகும். ஏனைய எல்லா வளங்களும் காரியங்களை சாத்தியமாக்கும்போது மனித வளமே அத்தகைய காரியங்களை சாத்தியமாக்குகின்றது. NERDC நிர்வாகம் அதன் மனித வளங்களை மிகவும் பயனுள்ள மற்றும் வினைத்திறன் முறையில் வழிநடத்தவும், பயன்படுத்தவும் மற்றும் மேம்படுத்தவும் அதிக முயற்சிகளை மேற்கொள்கின்றது.

இருப்பினும், நிலையத்தினுள் மனித வள முகாமைத்துவத்தில் (HRM) அடையாளம் காணப்பட்ட முக்கிய பிரச்சினைதான் திறமையான பொறியியல் ஆராய்ச்சியாளர்களை ஆட்சேர்ப்பு செய்து அவர்களை தக்கவைத்துக்கொள்வது. இலங்கையின் அரச துறையில் உள்ள பெரும்பாலான ஆராய்ச்சி நிறுவனங்களில் இது மிகவும் பொதுவான ஒரு பிரச்சினையாக அடையாளம் காணப்பட்டுள்ளது. பொறியியல்/விஞ்ஞான ஆராய்ச்சியாளர்கள் நிரலாக்கத்திற்கான தேசியக் கொள்கை, தேசிய அபிவிருத்தி மற்றும் ஆட்சேர்ப்புக்கான ஆராய்ச்சி விண்ணப்பம், ஊக்கத் தொகை, வெகுமதிகள், அங்கீகாரங்கள், ஆராய்ச்சியாளர்கள்/விஞ்ஞானிகளின் திறன் மேம்பாடு முதலியவற்றுக்கு குறிப்பாக பொறியியல் துறையில் இந்தப் பிரச்சினையை தீர்ப்பதற்கு ஒரு விரிவான ஒருங்கிணைந்த மூலோபாயத்திட்டம் தேவைப்படுகின்றது.

ஊதியத் திட்டங்களில் மீண்டும் மீண்டும் குறிப்பிடப்படும் சிக்கல்கள் காரணமாக, திறமையான பொறியாளர்களை நிலையத்தினுள் பணியமர்த்துவதிலும் மற்றும் தக்கவைத்துக்கொள்வதிலும் சிரமங்கள் இருந்தபோதிலும், NERDC ஒரு உத்தியாக கவர்ச்சிகரமான திறன்கள் மேம்பாட்டு வாய்ப்புகளை வழங்குவதன் மூலம் பொறியியல் ஊழியர்களை பணியமர்த்தவும் தக்கவைக்கவும் அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்துள்ளது. NERDC தன்னுடைய பொறியாளர்களுக்கு / விஞ்ஞானிகளுக்கு நிலையத்தின் திறன் மற்றும் மட்டுப்பாடுகள் என்பவற்றினுள் பரந்த அளவில் திறன் மேம்பாட்டு வாய்ப்புகளை வழங்குவதோடு உயர் படிப்புகள், பயிற்சி மற்றும் மேம்பாடு, சர்வதேச வெளிப்பாடுகள், வசதியான உகந்த சூழலை உருவாக்குதல், தொழில் மேம்பாட்டிற்கு உதவுதல் போன்ற கரும விடயங்களையும் மேற்கொள்கின்றது.

## 7.1 2022 பதவியணி வலிமை பற்றிய சுருக்கமான விபரம்

| வகுதி | அனுமதிக்கப்பட்டுள்ள ஆளணி | உண்மையான ஆளணி |
|---|---|---|
| உயர் முகாமைத்துவம் | 3 | 2 |
| பொறியியலாளர்கள்/விஞ்ஞானிகள் | 68 | 48 |
| ஏனைய நிறைவேற்றுநர்கள் | 10 | 6 |
| கனிஷ்ட முகாமையாளர்கள் | 14 | 7 |
| முகாமைத்துவ உதவியாளர்கள் (தொழில்நுட்ப) | 25 | 19 |
| முகாமைத்துவ உதவியாளர்கள் (தொழில்நுட்பம் சாராத) | 52 | 48 |
| ஆரம்பத் தரங்கள் (திறன்வாய்ந்த) | 107 | 74 |
| ஆரம்பத் தரங்கள் (பகுதியளவில் திறன்வாய்ந்த) | 3 | 0 |
| ஆரம்பத் தரங்கள் (திறன்சாராத) | 65 | 31 |
| **மொத்தம்** | **347** | **235** |

## 2022.12.31 ஆம் திகதிற்கு உண்மையான ஆளணி பற்றிய சருக்கம்




### 7.2 ஆளணி முகாமைத்துவம்

- அரசாங்கத்தின் அறிவுரையினால் 2022 ஆம் ஆண்டு காலப் பகுதியில் ஆட்சேர்ப்புக்கள் எதுவும் செய்யப்படவில்லை.
- 2022 ஆம் ஆண்டில் ஓய்வுபெறலும் மற்றும் பதவி விலகலும்

| இலக்கம் | பெயர் | பதவிப்பெயர் | வகுதி | விலகிய திகதி |
|---|---|---|---|---|
| **ஓய்வுபெறல்கள்** | | | | |
| 1 | திருமதி கே.எஸ்.எஸ். வீரசிங்க | பொறியியலாளர் | MM 1-1 | 30/09/2022 |
| 2 | திரு டப்ளியூ.எல்.எம்.ஜே. பெரேரா | தொழிலாளர் | PL-3 | 05/10/2022 |
| 3 | திரு என்.எல். ஜயவிக்ரம | மின்னியலாளர் | PL-3 | 05/10/2022 |
| 4 | திரு டப்ளியூ. பெனை சில்வா | தொழிலாளர் | PL-3 | 05/10/2022 |
| 5 | பொறியியலாளர் டீ,டீ,ஏ. நாமல் | பணிப்பாளர் நாயகம் | HM 2-3 | 10/11/2022 |
| 6 | திரு ஜே.ஏ.ஏ.டீ. ஜயசூரிய | பிரதிப் பணிப்பாளர் நாயகம் (R-D) | HM 2-1 | 31/12/2022 |
| 7 | பொறியியலாளர் என்.ஜி.டீ. விஜேசிறிவர்த்தன | ஆராய்ச்சி சகபாடி | HM 2-1 | 31/12/2022 |
| 8 | திருமதி ஏ.ஜி.என்.பி.கே. அன்ஹெட்டிகம | கணக்குகள் உதவியாளர் | JM 1-2 | 31/12/2022 |
| 9 | திரு டப்ளியூ.பி.எஸ்.ஏ. ஜுட் பெரேரா | ஒட்டுநர்/பொருத்துநர் | PL-3 | 31/12/2022 |
| 10 | திரு ரீ. அனந்த பெர்னாந்து | தச்சன் | PL-3 | 31/12/2022 |
| **பதவி விலகல்கள்** | | | | |
| 1 | திரு டப்ளியூ.பீ.எஸ்.ஓ. அபேவர்த்தன | இலத்திரனியல் வல்லுநர் | PL-3 | 19/01/2022 |
| 2 | திரு டப்ளியூ.கே.சி.பி. வல்பொல | மேற்பார்வையாளர் - தொறு பேட்டை | JM 1-2 | 11/02/2022 |
| 3 | பொறியியலாளர் என்.கே.ஐ.எஸ். லக்மால் | ஆராய்ச்சி பொறியியலாளர் | AR -1 | 02/03/2022 |
| 4 | திரு எச்.டப்ளியூ.ஜி.ஆர்.எல். ஹெட்டிகேவத்த | அலுவலக உதவியாள் | PL-1 | 18/03/2022 |
| 5 | திரு எம்.எஸ். ஆனந்த | முகாமைத்துவ உதவியாளர் | MA 1-2 | 03/06/2022 |
| 6 | திரு ஜி.எஸ். சமன்னாத் | மேசன் | PL-3 | 01/05/2022 |
| 7 | திருமதி பீ.ஜே.ஏ. தர்மரத்ன | முகாமைத்துவ உதவியாளர் (காசாளர்) | MA 1-2 | 01/07/2022 |
| 8 | திரு இ. பிரேமரத்ன | எந்திரவல்லுநர் | PL-4 | 05/08/2022 |
| 9 | திருமதி பி.ஜ. அதிகாரி | வரையுநர் | MA 2-2 | 15/09/2022 |
| 10 | திரு ஜே.எம்.ஆர்.எஸ். ஜயசிங்க | பணிப்பாளர் (நிதி) | HM 1-3 | 29/09/2022 |
| 11 | திரு கே.என்.கே.டீ. பெரேரா | ஒட்டுநர்/பொருத்துநர் | PL-3 | 22/11/2022 |
| 12 | திரு எம். சமீர சன்ஜய | தொழிலாளர் | PL-1 | 22/09/2022 |
| 13 | திரு எச்.பீ.எல்.எச். குணசேக்கர | ஆராய்ச்சி பொறியியலாளர் | AR -1 | 12/10/2022 |
| 14 | திரு ஏ.பீ.எம்.எல்.பீ. அபேகோன் | ஆராய்ச்சி பொறியியலாளர் | AR -1 | 09/10/2022 |
| 15 | திருமதி ஜி.ஜி.எஸ். ப்ரியங்கிகா | முகாமைத்துவ உதவியாளர் | MA 1-2 | 01/11/2022 |
| 16 | திரு ஐ.ஆர். சரத் | வாகனப் பழுபார்ப்பாளர் | PL-3 | 22/11/2022 |
| 17 | திரு கே.எம்.ரீ.சி. பந்துல கொனர | அலுவலக உதவியாள் | PL-1 | 01/12/2022 |
| 18 | திரு எஸ்.டப்ளியூ. அபேவர்த்தன | அலுவலக உதவியாள் | PL-1 | 01/12/2022 |

## 7.3 பயிற்சி மற்றும் தொடர் தொழில் அபிவிருத்தி

NERDC இன் முக்கிய வகிபங்கு பொறியியல் ஆராய்ச்சியும் அபிவிருத்தியும் என்பதால் முகாமைத்துவம் மனித வள அபிவிருத்தியில் தொடர்ந்து அக்கறை செலுத்துகின்றது. அதன்படி, நிலையத்திற்கு திறமையான மற்றும் பயனுள்ள சேவையைப் பெறுதல் மற்றும் ஊழியர்களின் தொழில் மேம்பாடு ஆகியவற்றை நோக்கமாகக் கொண்ட அனைத்து வகை ஊழியர்களுக்கும் சரியான அணுகுமுறைகளுடன் அறிவு, திறன்கள் மற்றும் ஆற்றல்கள் என்பவற்றை மேம்படுத்த அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்படுகின்றன.

### 7.3.1 பட்டப்பின்படிப்பு/தொழில் தகைமைகளை பூர்த்தி செய்ய வசதியளித்தல்

| 2022 ஆம் ஆண்டு காலப் பகுதியில் நடைபெறுகின்ற உயர் கற்கைகள் | | | | |
|---|---|---|---|---|
| No | பெயர் | விப்பெயர் | நிகழ்ச்சித்திட்டம் | நிறுவனம் |
| 01 | பொறியியலாளர் திருமதி ஜே.கே.ஐ.பி. ஜயசிறி | ஆராய்ச்சி பொறியியலாளர் | M/பொறியியல் - சக்தித் தொழில்நுட்ப PG டிப்ளோமா | மொரட்டுவ பல்கலைக்கழகம் |
| 02 | பொறியியலாளர் (திருமதி) எஸ்.ஏ.பி.எஸ். சில்வா | சிரேஷ்ட ஆராய்ச்சி பொறியியலாளர் | PhD கற்கைகள் | மொரட்டுவ பல்கலைக்கழகம் |

| இலக்கம் | நிகழ்ச்சித்திட்டத்தின் பெயல் | திகதி | யாருக்காக | பங்குபற்றியவர்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| 1 | சிறந்த வீடு பராமரிப்பு செயன்முறைகள் மற்றும் வேலைப்பட்டறை பாதுகாப்பு பயிற்சி | 31.08.2022 | பொறியியலாளர்கள், முகாமைத்துவ உதவியாளர் (தொழில்நுட்ப) முகாமைத்துவ உதவியாளர் (தொழில்நுட்பம் சாராத) மற்றும் ஆரம்ப மட்டம் | 50 |
| 2 | கோவை முகாமைத்துவம் பற்றி விழிப்பூட்டும் நிகழ்ச்சித்திட்டம் | 31.08.2022 | பொறியியலாளர்கள், முகாமைத்துவ உதவியாளர் (தொழில்நுட்ப) முகாமைத்துவ உதவியாளர் (தொழில்நுட்பம் சாராத) மற்றும் ஆரம்ப மட்டம் | 43 |
| 3 | ட்ரெலோ கருத்திட்ட முகாமைத்துவ கருவிசாதனங்களுக்கான அறிமுகம் பற்றிய விளக்க சமர்ப்பணம் | 29.11.2022 | பொறியியலாளர்கள் மற்றும் நிறைவேற்றுநர்கள் | 35 |
| 4 | இலங்கையில் குடிநீர் நோக்கத்தின் நிமித்தம் மழை நீரை சேமிப்பது பற்றிய விளக்க சமர்ப்பணம் | 22.11.2022 | பொறியியலாளர்கள், முகாமைத்துவ உதவியாளர் (தொழில்நுட்ப) முகாமைத்துவ உதவியாளர் (தொழில்நுட்பம் சாராத) மற்றும் ஆரம்ப மட்டம் | 24 |

7.3.3 உள்நாட்டு பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களில் / வேலையரங்குகளில் / கருத்தரங்குகளில்/ மாநாடுகளில் பங்குபற்றுதல்

| இலக்கம் | பெயரும் பதவிப்பெயரும் | பங்கு பற்றிய நிகழ்ச்சித்திட்டம் | நடத்திய நிறுவனம் | காலப் பகுதி | பங்குபற்றியவர்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| 1 | திரு கே.பி.டீ.டீ. ஜயசேக்கர பொறியியலாளர் | வளங்களின் வினைத்திறன் பகிர்ந்தளிப்பு பொருளாதாரம் பற்றிய சர்வதேச மாநாடு - 2020 | தேசிய தூய உற்பத்தி நிலையம் | 19.01.2022 | 02 |
| 2 | திருமதி என்.பி.ரீ. பெரேரா சிரேஷ்ட ஆராய்ச்சி பொறியியலாளர் | வளங்களின் வினைத்திறன் பகிர்ந்தளிப்பு பொருளாதாரம் பற்றிய சர்வதேச மாநாடு - 2020 | | 19.01.2022 | |
| 3 | திருமதி என்.பி.ரீ. பெரேரா சிரேஷ்ட ஆராய்ச்சி பொறியியலாளர் | ISO/IEC 17043:2010 பற்றிய மதிப்பீட்டாளர் பயிற்சி பாடநெறி | SLAB | 21.03.2022 முதல் 25.03.2022 வரை | 01 |
| 4 | திருமதி கே.ரீ. பியூமாலி தொழில்நுட்ப உதவியாளர் | முகாமைத்துவ திறன்கள் அபிவிருத்தி பற்றிய வேலையரங்கு | SDFL | 21.03.2022 முதல் 22.03.2022 வரை | 05 |
| 5 | திருமதி டீ.ஆர்.எஸ்.கே. விமலரத்ன பொறியியலாளர் | | | | |
| 6 | பொறியியலாளர் வை.எஸ்.பி. வீரசிங்க ஆராய்ச்சி பொறியியலாளர் | | | | |
| 7 | திரு என்.எஸ்.கே. சமரசிங்க சிரேஷ்ட ஆராய்ச்சி பொறியியலாளர் | | | | |
| 8 | பொறியியலாளர் டீ.ஏ.எம்.எஸ்.கே. ஹேமசிறி சிரேஷ்ட ஆராய்ச்சி பொறியியலாளர் | | | | |
| 9 | திருமதி யூ.என்.ஏ. பெர்னாந்து முகாமைத்துவ உதவியாளர் | ஆங்கில மொழி சான்றிதழ் பாடநெறி | SDFL | 25.03.2022 | 02 |
| 10 | திருமதி கே.பீ.எச்.வி. லெய்டென் முகாமைத்துவ உதவியாளர் | | | 25.03.2022 | |
| 11 | செல்வி ஜே.டீ. ஜனனி வாசனா முகாமைத்துவ உதவியாளர் | இறுதிக் கணக்குகளை தயாரிப்பது பற்றிய வேலையரங்கு | SDFL | 10.03.2022 முதல் 11.03.2022 வரை | 01 |
| 12 | திருமதி பீ.ஏ.எல்.பி. பொல்லேகல முகாமைத்துவ உதவியாளர் | தனியாள் கோவைகள் பேணல் | SDFL | 30.03.2022 முதல் 31.03.2022 வரை | 03 |
| 13 | திருமதி எம்.ஜி.எஸ்.என். கமகே முகாமைத்துவ உதவியாளர் | | | | |
| 14 | திரு பி.சி.என்.பி. பெரேரா முகாமைத்துவ உதவியாளர் | | | | |
| 15 | திரு எம்.டீ. சஹர்தீன் ஆராய்ச்சி பொறியியலாளர் | ISO 50001:2018 உசாதுணை அபிவிருத்திய பற்றிய பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் | தேசிய தூய உற்பத்தி நிலையம் | 28-01.04.2022 | 01 |
| 16 | திருமதி என்.பி.ரீ. பெரேரா சிரேஷ்ட ஆராய்ச்சி பொறியியலாளர் | EnMS நிபுணத்துவ பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் - தொடர்ச்சி | தேசிய தூய உற்பத்தி நிலையம் | 19-20.10 /22-24.11/2022 | 01 |

| இலக்கம் | பெயரும் பதவிப்பெயரும் | பங்கு பற்றிய நிகழ்ச்சித்திட்டம் | நடத்திய நிறுவனம் | காலப் பகுதி | பங்குபற்றியவர்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| 17 | திரு கே.பி.டீ.டீ. ஜயசேக்கர ஆராய்ச்சி பொறியியலாளர் | இரசாயனங்கள் முகாமைத்துவம் பற்றிய பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் | தேசிய தூய உற்பத்தி நிலையம் | 27-28.10.2022 | 01 |
| 18 | திரு ஐ.பி. பட்டுவிட்ட ஆராய்ச்சி பொறியியலாளர் | வாழ்க்கை வட்ட மதிப்பீட்டை கட்டியெழுப்புவது பற்றிய வேலையரங்கு | GBCSL | 25-26.11.2022 | 01 |
| 19 | திருமதி கே.ரீ. பியூமாலி தொழில்நுட்ப உதவியாளர் | கட்டிடங்களுக்கான மின்சார முறைமைகளை வடிவமைப்பது பற்றிய பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் | CETRAC | 15-17.12.2022 | 02 |
| 20 | திருமதி டீ.ஆர்.எஸ்.கே. விமலரத்ன ஆராய்ச்சி பொறியியலாளர் | | | | |
| 21 | பொறியியலாளர் இ.ஏ.என்.கே. எதிரிசிங்க | இலங்கையில் கனிய வளங்கள் கைத்தொழிலுக்கான பெறுமதி சேர்ந்த வாய்ப்புகள் பற்றிய கருத்தரங்கு | IDB | 30.12.2022 | 10 |
| 22 | திரு கே.எல். மீதெனிய | | | | |
| 23 | திருமதி என்.பி.ரீ. பெரேரா | | | | |
| 24 | கலாநிதி ரீ.ஏ.எஸ். அனுருத்த | | | | |
| 25 | கலாநிதி ஏ.ஜி.எம்.ரீ. ஸ்ரீவர்த்தன | | | | |
| 26 | திருமதி பி.எம்.வை.எஸ். பத்திராஜ | | | | |
| 27 | திரு எஸ்.ஏ.பி. சாலிந்த பெரேரா | | | | |
| 28 | திரு கே.பி.டீ.டீ. ஜயசேக்கர | | | | |
| 29 | திருமதி டீ.ஆர்.எஸ்.கே. விமலரத்ன | | | | |
| 30 | திரு ஐ.பி. பட்டுவிட்ட | | | | |



08.

# 2022 ஆம் ஆண்டிற்கான செயலாற்றுகை குறிப்புகள்

## 08.1 முக்கிய ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி குறிப்புகள்

**நிறைவுசெய்யப்பட்டுள்ள ஆ-அ கருத்திட்டங்கள்**

### 8.1.1 கரிம உரங்களை உற்பத்தி செய்ய தேவையான இயந்திரங்களை தயாரித்தல்

இலங்கையின் விவசாயத்தில் இரசாயன உரங்களின் பாவனையை இல்லாமல் ஒழிப்பதற்கான அரசாங்கத்தின் முயற்சிக்கு இணங்க, நாடு முழுவதும் கரிம உரங்களைப் பயன்படுத்தி "வளமான நோக்கங்களின்" மூலம் வழங்கிய வழிகாட்டல்களை பின்பற்றி, கரிம உர உற்பத்திக்கு தேவையான இயந்திரங்களை உருவாக்கும் கருத்திட்டத்தை NERDC ஆரம்பித்தது. இது நாட்டின் தற்போதைய விவசாய நிலப்பரப்பு பற்றிய ஒரு விசாரணையில் சம்பந்தப்பட்டுள்ளது.

நடத்திய விசாரணையின் அடிப்படையில், ***ஷ்ரெடர்ஸ்களுக்கான / க்ரஷர்களுக்கான*** தேவை இருப்பது கண்டறியப்பட்டுள்ளது. அத்துடன் பெரிய அளவிலான ***கம்போஸ்ட்டு சுழல் சாதனங்களின்*** நிமித்தம் NERDC பாதுகாப்பான சக்தி வினைத்திறன் வாய்ந்த கரிம உர இயந்திரத்திற்கு முன்னுரிமை அளித்து நம்பகமான, எளிமையான, பயனர்-நேய தொழில் நுட்பங்களை உருவாக்குவதன் மூலம் பதிலளித்தது.

- **ஷ்ரெடர் / க்ரஷர் (நடுத்தர அளவான)**

இந்த இயந்திரம் காஸ்டர் சக்கரங்கள் பொருத்தப்பட்டுள்ளதால் எளிதில் நகரக்கூடியது. இயந்திரத்தால் உற்பத்தி செய்யப்படும் துண்டாக்கிய / நொறுக்கிய பொருள் ½" முதல் 1½" மட்டுப்பாட்டில் காணப்படும். இது உரத்தை தயாரிப்பதற்கு பரிந்துரைத்த உகந்த அளவாகும்.

கொள்ளளவு: 350-400கிகி/ம

சக்தி: 5kW மூன்று கட்ட மோட்டார் அல்லது 7-8 குதிரை வலு உடைய இரண்டு சக்கர உழவு இயந்திரம்





*ஷ்ரெடர் / க்ரஷர் என்ஜின் பதித்த (நடுத்தர அளவான) மற்றும் ஷ்ரெடர் / க்ரஷர் மோட்டார் பதித்த (நடுத்தர அளவான) இயந்திரங்கள்*

- **ஷ்ரெடர் / க்ரஷர் (பாரிய அளவான)**

பாரியளவில் பயன்படுத்துவதற்காக உற்பத்தி செய்வதற்கு வடிவமைத்த ஷ்ரெடர்/ க்ரஷர் (பாரியளவான) ஒரு நான்கு சக்கர உழவியந்திரத்தின் PTO வெளியீட்டு சாதனத்துடன் பொருத்தப்பட்டுள்ளது.

கொள்ளளவு: 1500- 2000 கிகி/ம

சக்தி: 25-45 குதிரை வலு என்ஜின் கொள்ளளவுடைய ஏதாவது நான்கு சக்கர உழவியந்திரம்



*நான்கு சக்கர உழவியந்திரம் பதித்த ஷ்ரெடர்/க்ரஷர் (பாரியள அளவான)*

- **கொம்போஸ்ட்டு சுழல் சாதனம் (பாரிய அளவான)**

கம்போஸ்ட்டு சுழல் சாதனம் பாரிய அளவிலான உரம் உற்பத்தியாளர்களுக்காகவும், உரப் படலத்திற்கு சமனான தட்டையான நிலத்தின் வசதிகளுடன் வடிவமைக்கப்பட்டுள்ளது. இது உருப்படத்தில் காட்டப்பட்டுள்ளபடி இயந்திரத்துடன் இணைந்த நான்கு சக்கர உழவு இயந்திரத்தினால் இயக்கப்படுகின்றது.

சுழல் கொள்ளளவு: 100 மீ/ம - கொம்போஸ்ட்டு படலத்தின் அகலம் 1.5 மீற்றர்.

சக்தி: சுழல் சாதனத்தின் இலகுவான இயக்கத்திற்கு ஒரு இரட்டைக் கவ்வியுடைய 45 குதிரை வலு அதிக கொள்ளளவுடைய நான்கு சக்கர உழவியந்திரம் சிபாரிசு செய்யப்படுகின்றது.



*நான்கு சக்கர உழவியந்திரம் பதித்த (பாரிய அளவான) கொம்போஸ்ட்டு சுழல் சாதனம்*

இயந்திரங்களை கள ரீதியில் பரிசோதனை செய்ய NERD நிலையம் திவுலப்பிட்டிய பிரதேச சபையுடன் ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தை செய்துள்ளது . திவுலப்பிட்டி பிரதேச சபையின் கீழ் இயங்கும் வல்பிட்ட விவசாய பண்ணையில் கள ரீதியான பரிசோதனையை ஷ்ரெடர் இயந்திரங்கள் வெற்றிகரமாக நிறைவு செய்தன. திவுலபிட்டிய பிரதேச சபை தனது கரிம உரங்களை உற்பத்தி செய்யும் பொருட்டு ஷெடர் இயந்திரங்களை கொள்வனவு செய்ய உடன்பட்டுள்ளது.

### 8.1.2 மீனவர்களுக்கு மாசி உலர்த்தியை தயாரித்தல் பரிசோதித்தல் மற்றும் உத்தியோகபூர்வமாக திறந்து வைத்தல்

இது தேசிய நீரியல் வளங்கள் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி முகவர் நிலையத்துடன் (NARA) இணைந்து மேற்கொள்ளப்படும் R-D திட்டமாகும். NERDC இந்த இயற்கையான வெப்பச்சலன வகை உலர்த்தியை தயாரித்து புகைபிடிக்கும் பிரிவை உயர்தர மாசிகளை உற்பத்தி செய்வதற்கு உருவாக்கியது. இது தற்போது மிகவும் பொதுவான நடைமுறையாக உள்ளது. சூரிய சக்தியில் இயங்கும் உலர்த்தியின் செயல்முறையின் மட்டுப்பாடுகளை தாண்டும் நோக்கில் இது உருவாக்கப்பட்டுள்ளது. உலர்த்தி தேவையான ஊட்டச்சத்தும் உணர்வுப் பண்புகளும் அடங்கிய நல்ல தரமான மாசிகளை உற்பத்தி செய்யும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. குடிசை கைத்தொழில் மட்டத்தில் மாசிகளை உற்பத்தி செய்யும் மீனவர்களுக்கு குறிப்பாக இந்த உலர்த்தி பொருத்தமானது.

மாத்தறை, திக்வெல்ல, கோட்டேகொடவில் உலர்த்தியின் சோதனை நடத்தப்பட்டது. இந்த இயற்கை வெப்பச்சலன வகை உலர்த்தியைப் பயன்படுத்தி புகைபிடித்தல், உலர்த்துதல் ஆகிய இரண்டு படிமுறைகளையும் மேற்கொள்ளலாம். இதில் உயிரணுத்திணிவு சக்தி எரிபொருளாகப் பயன்படுத்தப்படுவதால், பாதகமான வானிலை நிலைகளிலும் தொடர்ந்து உலர்த்தும் திறன் இந்த உலர்த்தியின் நன்மையாகும். உலர்த்தும் சோதனையில், 1000 கிலோ புதிய *ஸ்கிப்ஜாக் டுனா* (பலாயா) மீன்களை, புகைபிடித்த பிறகு, 4 நாட்களுக்குள், பகலில் மட்டும் எரிபொருளை சேர்த்து, தேவையான தரத்திற்கு உலர்த்தலாம்.



***ஸ்தலத்தில் நிறுவப்பட்டுள்ள உலர்த்தி***



***உலர்த்தி பரிசோதனை** - NARA*



*உலர்த்துவதற்காக அவித்து புகையடித்த மீன்கள்*



*உலர்த்திய பின்னர் இறுதித் தயாரிப்பாக கிடைத்த மாசிகள்*

**மாசி உலர்த்தியின் தகவுதிறன்கள்**

- வகை: இயற்கை வெப்பச்சலனம்
- எரிபொருள்: எரி விறகு, குற்றிகள் அல்லது குச்சிகள்
- பரிமாணங்கள்: 6.2மீ x 1.6மீ x 3.2மீ
- கொள்ளளவு: ~ துண்டாக்கி கொதிக்கவைத்த1000 கிகி மீன்
- படலப் பரப்பு: 37.5 மீ$^2$
- உலர்த்தும் வெப்பநிலை: 400C - 480C
- உலர்த்தும் காலம்: 48 ம
- எரிபொருள் நுகர்வு: 7 - 12 கிகி/ம
- எரிபொருள் வாயுவுக்கான புகைபோக்கியின் உயரம்: 3.2மீ

### 8.1.3 ஒட்சிசன் செறிவூட்டி

இலங்கையின் ஆராய்ச்சி மற்றும் புத்தாக்க இராஜாங்க அமைச்சின் பணிப்புரைகள் பிரகாரமும், இலங்கையின் அதிமேதகு ஜனாதிபதியின் வழிகாட்டல் பிரகாரமும், தேசிய பொறியியல் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிலையம் (NERDC) ஒட்சிசன் செறிவூட்டி முன்னோடி அலகை வெற்றிகரமாக உருவாக்கி அபிவிருத்தி செய்துள்ளது. ஒட்சிசன் செறிவூட்டி என்பது ஒரு மருத்துவ சாதனமாகும். இது சூழலில் இருந்து காற்றை உள்வாங்கி, மூலக்கூறுகளுடைய சல்லடைகளின் படலங்களின் ஊடாக நோயாளிக்கு பிரசவத்திற்காக அறை ஒட்சிசன் சிகிச்சை நிலைகளுக்கு கடத்துகின்றது. தேசிய விஞ்ஞான தினத்தை முன்னிட்டு நடைபெற்ற விழாவில் அதிமேதகு ஜனாதிபதிக்கு அதனை வழங்கி வைத்ததன் பின்னர், இணக்கப் பரிசோதனையின் நிமித்தம் இந்த உபகரணங்கள் உயிரியல் மருத்துவ ஆராய்ச்சி நிறுவகத்திடம் வழங்கப்பட்டுள்ளன. கள பரிசோதனையை மேற்கொள்ள NMRA இன் அங்கீகாரம் எதிர்பார்க்கப்படுகின்றது.

## 8.2 சேவைகள் பற்றிய குறிப்புகள்

### 8.2.1 சக்தி மற்றும் சுற்றாடல் சேவைகள் பிரிவு (E-ESD)

NERDC நிலையத்தின் E-ESD கைத்தொழிற்சாலைகள், வணிக நிறுவனங்கள், அரச நிறுவனங்கள் போன்றவற்றின் சக்தி முறைமைகள், கைத்தொழில்துறை செயல்முறைகள் சூழல் முறைமைகள் என்பவற்றை கண்காணித்தல், கட்டுப்படுத்துதல், மேம்படுத்துதல் மற்றும் நிர்வகித்தல் மற்றும் காற்றின் தரம், கழிவுநீருக்கான நிலையான சோதனை வசதிகளை வழங்குதல் மற்றும் குளிர்சாதன பெட்டிகள், மின் விளக்குகள் மற்றும் வாகனங்களின் பற்றரிகள் என்பவற்றுக்கு சோதனை வசதிகளை வழங்குதல் என்பன போன்ற செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ளது. இது ISO17025:2017 அங்கீகாரம் பெற்ற ஆய்வகங்களுடன் கழிவு நீர் பகுப்பாய்வு, ஒலி அளவு அளவீடுகள், காற்றின் தர அளவீடுகள், மின் விளக்குகள் சோதனை மற்றும் குளிர்சாதன பெட்டி சோதனை ஆகியவற்றின் நிமித்தம் இயங்கி வருகின்றது. 2022 ஆம் ஆண்டு காலப் பகுதியில் இந்தப் பிரிவு 549 சேவைகளை கைத்தொழில்களுக்கு வழங்கி அதன் மூலம் 23.6 மில்லியன் ரூபா வருமானத்தை ஈட்டியுள்ளது.

**E-E SD இன் வணிக செயற்பாட்டு இலக்குகளும் மற்றும் அடைந்த சாதனைகளும்**

2022 ஆம் ஆண்டில் வணிக செயற்பாடுகளின் பௌதீக மற்றும் நிதிசார் இலக்குகள் மற்றும் அடைந்த சாதனைகள் என்பன தொடர்பான சுருக்க விபரங்கள் பின்வரும் அட்டவணையில் தரப்பட்டுள்ளன:

| கருத்திட்டம்/ செயற்பாடு | பௌதீக (சேவைகளின் எண்ணிக்கை) | | நிதிசார் (மில்லியன் ரூபா) | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | வருமானம் | | | பங்களிப்பு | | |
| | இலக்கு | சாதனை | இலக்கு (இ.ரூ.) | சாதனை (இ.ரூ.) | சாதனை மீதான இலக்கு (%) | இலக்கு (இ.ரூ.) | சாதனை (இ.ரூ.) | சாதனை மீதான இலக்கு (%) |
| கைத்தொழில்களுக்கான சேவைகள் | 952 | 493 | 30.5 | 21.8 | 71.5 | 25.5 | 12.3 | 48.2 |
| கைத்தொழில்களுக்கான ஆய்வுகூட பரிசோதனை | 275 | 55 | 5.5 | 1.7 | 30.9 | 3.3 | 0.2 | 6.0 |
| பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் | 2 | 1 | 0.1 | 0.1 | 100 | 0.3 | 0.0 | 0.0 |
| **மொத்தம்** | 1229 | 549 | 36.1 | 23.6 | 67% | | | 18% |

E-E SD இன் வணிக செயற்பாட்டு இலக்குகளும் மற்றும் அடைந்த சாதனைகளும் - 2022

## கைத்தொழில்களுக்கான சேவைகள்

இந்தப் பிரிவின் முக்கிய வணிக நடவடிக்கை கைத்தொழிலுக்கு தேவையான சேவைகளை வழங்குவதாகும். பல்வேறு கைத்தொழில்களுக்கு அவற்றின் கோரிக்கைகள் அடிப்படையில் பின்வரும் சேவைகள் வழங்கப்படுகின்றன.

- கொதிகலன் பகுப்பாய்வு, சுருதிகொடுத்தல் மற்றும் வினைத்திறன் சோதனைகள்
- கைத்தொழில் பதனிடும் செயல்முறை கண்காணிப்பு சேவைகள்
- ஒலி மற்றும் வளி தரக் கட்டுப்பாட்டு முறைமை வடிவமைப்புகள்
- புகைக் கட்டுப்பாட்டு முறைமை வடிவமைப்புகள்
- தரநியமங்களின் அடிப்படையிலான ஒலி மற்றும் வளி தர கணக்காணிப்பு சேவைகள்
- தரநியமங்களின் அடிப்படையிலான காகித வளங்கள் புகை கண்காணிப்பு சேவைகள்
- OSHA தரநியம அடிப்படையிலான உள்ளக வளி தர கண்காணிப்பு

2022 ஆம் ஆண்டில், கைத்தொழில் சேவைகள் ஊடான வருமான இலக்கு மற்றும் சாதனை முறையே 30.5 மில்லியன் மற்றும் 21.8 மில்லியன் இலங்கை ரூபாவாக இருந்தன. எதிர்பார்க்கப்படும் பங்களிப்பு இலக்கு மற்றும் சாதனை முறையே 25.5 மில்லியன் மற்றும் 12.3 மில்லியன் இலங்கை ரூபாவாக இருந்தன.

பல செயற்பாடுகளில் மேற்கொள்ளப்பட்டிருந்த சேவைகளின் எண்ணிக்கை பற்றிய விபரம் பின்வரும் அட்டவணையில் தரப்பட்டுள்ளது.

| செயற்பாட்டு வகை | சேவைகளின் எண்ணிக்கை |
|---|---|
| கொதிகலன் செயல்திறன் மற்றும் காகித வளங்கள் எரிப்பு முறைமைகளின் புகை கண்காணிப்பு | 167 |
| ஒழுங்குவிதிகளின் பிரகாரம் ஒலி மட்ட அளவீடுகள் | 127 |
| ஒழுங்குவிதிகளின் பிரகாரம் வளிமண்டல வளியின் தர கண்காணிப்பு | 96 |
| தொழிற்சாலைகளில் சூழல் பிரச்சினைகளை கட்டுப்படுத்துவதற்கான தீர்வுகளை வழங்குதல் | 26 |
| கைத்தொழில் பதனிடும் செயல்முறை கண்காணிப்பு சேவைகள் | 67 |
| கருவி அளவுத்திருத்தம் மற்றும் குறுக்கு சோதனை | 09 |
| சக்திக் கணக்காய்வு | 01 |
| கண்டுபிடிப்பாளர்களுக்கான இன்குபேட்டர் சேவைகள் | 18 |

## பல வித்தியாசமான ஆய்வுகூட சேவைகள்

| செயற்பாட்டு வகை | சேவைகளின் எண்ணிக்கை |
|---|---|
| சிவில் பொறியியல் ஆய்வுகூட பரிசோதனை | 117 |
| கழிவுநீர் மாதிரி பகுப்பாய்வு | 65 |
| மின் விளக்கு பரிசோதனை | 48 |
| குளிர்சாதனப்பெட்டிகள் பரிசோதனை | 4 |
| வாகன பற்றரிகள் பரிசோதனை | 4 |

### 8.2.2 அபிவிருத்தி மற்றும் கருத்திட்டப் பிரிவு

NERDC- அபிவிருத்தி செய்த தொழில்நுட்பங்களையும் அதன் உசாதுணைகளையும் பயன்படுத்தி அபிவிருத்தி மற்றும் கருத்திட்டப் பிரிவு (DPD) பல்வேறு துறைகளில், அரச மற்றும் அரச சாரா நிறுவனங்கள் மற்றும் தனிநபர்கள் அடங்கலாக கைத்தொழில்துறை துறைகளுக்கு சேவைகளை வழங்குகின்றது. பொதுவாக, DPD NERDC சார்ந்த செலவு குறைந்த கட்டிட நிர்மாணங்கள், நடை பாலங்கள், தடுப்புச்சுவர்கள், மயானவாடிகள், எரியூட்டிகள், உயிரணுத்திணிவு சக்தி மின்பிறப்பாக்கிகள் மற்றும் வடிவமைப்பு மற்றும் உசாதுணைகள் அடங்கலாக இயந்திரத் தயாரிப்புகள் போன்ற தொழில்நுட்பங்களை அபிவிருத்தி செய்கின்றது.

அபிவிருத்தி மற்றும் கருத்திட்டங்கள் பிரிவு மேற்கொண்டு நிறைவேற்றிய வணிக அளவான பணிகள் பற்றிய விபரங்கள் பின்வரும் அட்டவணையில் தரப்பட்டுள்ளன.

| இலக்கம் | வணிக செயற்பாடுகள் | மொத்த செலவு (மில்லியன் ரூபா) |
|---|---|---|
| 01 | சிவில் பொறியியல் உசாதுணை சேவைகள் | 1,916,574 |
| 02 | கட்டிட நிர்மாணங்கள் நிர்மாணிப்பு | 37,417,191 |
| 03 | கொங்கிறீட்டு உற்பத்திகள் விற்பனை | 2,214,990 |
| 04 | பொருட்களின் உற்பத்தி மற்றும் விநியோகம், பொறித்தொகுதிகளின் நிர்மாணம், உருவாக்கம், நிறுவுகை, பழுதுபார்ப்பு மற்றும் மேம்பாட்டுப் பணிகள் மற்றும் எரிதகனசாதனங்களின் வழமையான சேவைகள் | 9,508,299 |



*ராஜகிரிய IIM வளாகத்தில் பழைய பகுதியளவு நிரந்தரமான கட்டிடத்தை புனர்நிர்மாணித்து மூன்று மாடிக் கட்டிடமாக பரிவர்த்தனை செய்தல் (கட்டம்-1) (DPD/COM/6.5 (1)/20/2022)*



*நடைபால நிர்மாணம் - சிவில் பொறியியல் அலுமினி - மொரட்டுவ பல்கலைக்கழகம்*

## வருமானம் பற்றிய விபரம்

| செயற்பாடு | உப செயற்பாடு | மதிப்பிடப்பட்டுள்ள வருமானம் 2022 (இ.ரூ. வரி நீங்கலாக) |
|---|---|---|
| சிவில் பொறியியல் உசாதுணை சேவைகளை வழங்குதல் | **மொத்தம்** | 2,221,573.71 |
| | ப்ளாஸ்டிப்பாக் லங்கா (தனியார்) கம்பனிக்கு சிவில் பொறியியல் உசாதுணை சேவைகளை வழங்குதல் (2022 ஆம் ஆண்டில் தொடர்ந்த கருத்திட்டத்தின் எஞ்சிய பணி) | 29,500.00 |
| | ஸ்தல சோதனையிடுகை கட்டணங்கள் | 310,707.04 |
| | சிவில் பொறியியல் வரைபுகளையும் அறிக்கைகளையும் தயாரித்து சமர்ப்பித்தல் | |
| | களுத்துறை வாத்துவ சுகாதார சேவைகள் பிராந்திய பணிப்பாளருக்கு சிவில் பொறியியல் உசாதுணை சேவைகளை வழங்குதல் (2022 ஆம் ஆண்டில் தொடர்ந்த கருத்திட்டத்தின் எஞ்சிய பணி) | 1,000,000.00 |
| | சீனா ITI உயிரியல் தொழில்நுட்ப ஆய்வுகூடத்திற்கு சிவில் பொறியியல் உசாதுணை சேவைகளை வழங்குதல் (2022 ஆம் ஆண்டில் தொடர்ந்த கருத்திட்டத்தின் எஞ்சிய பணி) | 89,700.00 |
| | நியுஸ் பேப்பர் (சிலோன்) தனியார் கம்பனிக்கு பொறியியல் உசாதுணை சேவைகளை வழங்குதல் | |
| | இறப்பர் அபிவிருத்தித் திணைக்களத்திற்கு சிவில் பொறியியல் உசாதுணை சேவைகளை வழங்குதல் | |
| சிவில் பொறியியல் நிர்மாண சேவைகள் | **மொத்தம்** | 85,441,983.77 |
| | நடை பாலத்தின் நிர்மாணம் - சிவில் பொறியியல் அலுமினி - மொரட்டுவ பல்கலைக்கழகம் (2022 ஆம் ஆண்டில் தொடர்ந்த கருத்திட்டத்தின் எஞ்சிய பணி) | 404,951.19 |
| | ராஜகிரிய சுதேசிய மருத்துவ IIM நிறுவகத்தின் விரிவுரை மண்டப கட்டிடத்தையும் சிற்றுண்டிச்சாலை கட்டிடத்தையும் புனர்நிர்மாணித்தல் (2022 ஆம் ஆண்டில் தொடர்ந்த கருத்திட்டத்தின் எஞ்சிய பணி) | 10,037,032.58 |
| | சுதேசிய மருத்துவ நிறுவகத்தின் பழைய பகுதியளவிலான நிரந்தர கட்டிடத்தை சுதேசிய மருத்துவ IIM நிறுவக மூன்று மாடிக் கட்டிடமாக பரிவர்த்தனை செய்தல் | |
| முன்கூட்டி வார்த்தெடுத்த மற்றும் முன்கூட்டி அழுத்திய கொங்கிறீட்டுப் பொருட்கள் | **மொத்தம்** | 2,214,990.08 |
| சிறு உசாதுணை, நிர்மாணம், கட்டுதல், நிறுவுதல் மற்றும் ஏனைய சேவைகள் (சிவில் பொறியியல் சேவைகள் தவிர) | **மொத்தம்** | 10,754,733 |
| | மிளகு விதை பிரிக்கும் இயந்திரம் ஒன்றை நிர்மாணித்து விற்பனை செய்தல் | 31,481.50 |
| | மிளகு விதை பிரிக்கும் இயந்திரம் ஒன்றை நிர்மாணித்து விற்பனை செய்தல் | 31,481.50 |
| | மூலிகை இலை மற்றும் விதை தூளாக்கும் இயந்திரம் ஒன்றை நிர்மாணித்து விற்பனை செய்தல் | 109,000.00 |
| | மரவெள்ளியை சிறுசிறு துண்டுகளாக அரியும் இந்திரம் ஒன்றை நிர்மாணித்து விற்பனை செய்தல் | 38,000.00 |

| செயற்பாடு | உப செயற்பாடு | மதிப்பிடப்பட்டுள்ள வருமானம் 2022 (இ.ரூ. வரி நீங்கலாக) |
|---|---|---|
| சிறு உசாதுணை, நிர்மாணம், கட்டுதல், நிறுவுதல் மற்றும் ஏனைய சேவைகள் (சிவில் பொறியியல் சேவைகள் தவிர) | லங்கா AAC (தனியார்) கம்பனிக்கு எம்சி செங்கல் வெட்டும் ஒரு இயந்திரத்தை நிர்மாணித்து விற்பனை செய்தல் | 184,910.71 |
| **ஆண்டு ஆரம்பத்திலுள்ள காசும் காசு ஒப்புரவுகளும்** | 144,590,658.86 | 157,907,012.39 |
| **ஆண்டு இறுதியிலுள்ள காசும் காசு ஒப்புரவுகளும்** | 147,404,422.71 | 144,590,658.86 |

| 02. . **காசும் மற்றும் காசு ஒப்புரவுகளும்** | 2022.12.31 ஆம் திகதியிலுள்ள | 2021.12.31 ஆம் திகதியிலுள்ள |
|---|---|---|
| இலங்கை வங்கி ஜா-எல கிளை க/கு இலக்கம் 404949 | 6,776,599.69 | 13,000,050.64 |
| இலங்கை வங்கி ஜா-எல கிளை க/கு இலக்கம் 405005 | 1,138,411.18 | 353,663.61 |
| இலங்கை வங்கி ஜா-எல கிளை க/கு இலக்கம் 404956 | 1,626,245.62 | 633,363.45 |
| இலங்கை வங்கி கூட்டுத்தாபன கிளை க/கு இலக்கம் 1667 | 2,359,666.22 | 316,922.34 |
| கையிலுள்ள காசு | 3,500.00 | 186,658.82 |
| தற்காலிக கடன் வைப்புக்கள் - ஜா-எல கிளை | 131,500,000.00 | 83,100,000.00 |
| தற்காலிக கடன் வைப்புக்கள் - கூட்டுத்தாபன கிளை | 4,000,000.00 | 47,000,000.00 |
| | 147,404,422.71 | 144,590,658.86 |



10.

# கடந்த 10 ஆண்டு காலப்பகுதியில் அடைந்த நிதிசார்ந்த சாதனைகள்

## நிதிசார்ந்த செயலாற்றுகை - 2013 – 2022

ரூ.000

| ஆண்டு | அனுமதித்த மூலதன வரவுசெலவுத் திட்டம் | கிடைத்த தொகை | உண்மையான மூலதன செலவுகள் | NERDC இன் சம்பாத்தியம் |
|---|---|---|---|---|
| 2013 | 92,676 | 61,519 | 36,910 | 40,890 |
| 2014 | 63,000 | 58,716 | 38,333 | 65,540 |
| 2015 | 65,000 | 43,569 | 37,137 | 66,913 |
| 2016 | 50,000 | 47,345 | 45,505 | 73,349 |
| 2017 | 57,000 | 55,357 | 76,655 | 31,625 |
| 2018 | 57,000 | 57,000 | 47,908 | 70,622 |
| 2019 | 51,750 | 44,690 | 50,900 | 83,793 |
| 2020 | 58,000 | 57,838 | 27,530 | 39,848 |
| 2022 | 41,500 | 28,730 | 32,764 | 72,848 |
| 2022 | 45,000 | 13,472 | 14,833 | 83,645 |
| **மொத்தம்** | 580,926 | 468,236 | 408,475 | 629,073 |



# 11.

# கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்களின் பதிவுகள்

## 2022 ஆம் ஆண்டு காலப்பகுதியில் கணக்காய்வுக் குழுக் கூட்டங்களின் போது எடுத்த விஷேட தீர்மானங்கள்

| கூட்டம் | தீர்மானங்கள் |
|---|---|
| 1-வது கூட்டம்<br><br>2022 ஆம் ஆண்டு பெப்ருவரி மாதம் 15 ஆம் திகதி | 1. 2022 ஆம் ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்களைப் பொறுத்தவரை, வரலாற்றில் நிகழ்ந்த சம்பவங்களால் பரிவர்த்தனைக்கான விளைவுகள் கணக்கீட்டு நியமங்களின்படி மதிப்பீடு செய்யப்படுதல் வேண்டும் என்பது கணக்காய்வுக் குழுவின் உறுப்பினர்களின் கருத்தாகும். அதே நேரத்தில் அந்த வித்தியாசம் கணக்கீட்டுக் குறிப்புகளின் கீழ் வெளிப்படுத்தப்படுதலும் வேண்டும்.<br><br>2. கணக்காய்வுக் குழுவின் உறுப்பினர்கள், அனைத்துப் பொருட்களையும் அகற்றுதல் மற்றும் ஏதேனும் தொடர்புடைய ஏல நடவடிக்கைகள், பணிப்பாளர்கள் சபையின் அனுமதியுடன் நியமித்த குழுவினால் மேற்கொள்ளப்படுதல் வேண்டும் என்று தெரிவித்தனர்.<br><br>3. ஆபத்துப் பகுதிகளின் அடிப்படையில் இறுதி உள்ளகக் கணக்காய்வுத் திட்டம் தயாரிக்கப்படவுள்ளதாக அமைச்சின் பிரதான உள்ளகக் கணக்காய்வாளரான கணக்காய்வுக் குழுவின் உறுப்பினர் சுட்டிக்காட்டினார். |
| 2-வது கூட்டம்<br><br>2022 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 1 ஆம் திகதி | 1. கணக்காய்வு அறிக்கை தோல்வியடைந்த கருத்திட்டங்களை மட்டுமன்றி தோல்விக்கான காரணத்தையும் வெளிப்படுத்த வேண்டும் என அரசாங்க கணக்காய்வாளர் நாயகம் சுட்டிக்காட்டினார். அதே நேரத்தில், புதிய கருத்திட்டங்களைத் தொடங்கும்போது, சாத்தியவள ஆய்வை நடத்த வேண்டும் என்றும், சமூக சாத்தியவள ஆய்வுகள் மற்றும் புதிய தொழில்முனைவோர் உருவாக்கம் என்பவற்றை கருத்தில் கொண்டு பயனுள்ள கருத்திட்டத் திட்டம் தயாரிக்கப்படுதல் வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.<br><br>2. புதிதாக கொள்வனவு செய்த மென்பாகங்களை நிறுவுவதில் தாமதம், விநியோகதத் தரப்புகளை தேர்ந்தெடுத்தல் மற்றும் பணம் செலுத்துதல் போன்றன பற்றி விசாரணையை நடத்தி பணிப்பாளர் சபைக்கு அறிக்கையை சமர்ப்பிக்குமாறு கணக்காய்வுக் குழு பரிந்துரைத்தது. |



# 12

## 2022 திசம்பர் மாதம் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை

**எனது இலக்கம்:** IMT/C/NERDC/FA/2022

**திகதி**: 2023 **ஆம் ஆண்டு மே மாதம் 31 ஆம் திகதி**

**தலைவர்**
**இலங்கைத் தேசிய பொறியியல் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிலையம்**

**2022 திசம்பர் மாதம் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான இலங்கை தேசிய ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிலையத்தின் நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12 ஆம் பிரிவின் பிரகாரம் வெளியிடப்பட்ட கணக்காய்வாளர் நாயகத்தின் கணக்காய்வு அறிக்கை**

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இலங்கை தேசிய பொறியியல் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிலையத்தின் 2022 திசம்பர் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள், 2022 திசம்பர் 31 ஆம் திகதிற்கான நிதி சார்ந்த செயலாற்றுகைக் கூற்று, ஒப்புரவு மாற்றங்கள் பற்றிய கூற்று மற்றும் அந்தத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப் பாய்ச்சல் கூற்று என்பவற்றை உள்ளடக்கிய வருடாந்த அறிக்கை பற்றிய கணக்காய்வு, இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் பிரிவு 154 (1) இன் ஏற்பாடுகளினதும் 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டம் மற்றும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டம் ஆகியவற்றின் ஏய்பாடுகளினதும் பிரகாரம் எனது வழிகாட்டலின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. அரசியலமைப்பின் பிரிவு 154 (6) இன் ஏற்பாடுகளின்படி சமர்ப்பிக்கப்படும் எனது அறிக்கை, காலக் கிரமத்தில் பாராளுமன்றத்தில் ஆற்றுப்படுத்தப்படும்.

2022 திசம்பர் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான இந்த நிலையத்தின் நிதிக் கூற்றுக்கள், இலங்கை அரச துறைக் கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம், அந்தத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதி நிலைக் கூற்று, நிதி சார்ந்த செயலாற்றுகைக் கூற்று மற்றும் காசுப் பாய்ச்சல்கள் பற்றிய கூற்று மற்றும் ஒப்புரவு மாற்றங்கள் பற்றிய கூற்று நிலையத்தின் உண்மையான மற்றும் நியாயமான கண்ணோட்டத்தை தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாக இருந்தது.

### 1.2 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இகநி) இணங்க எனது கணக்காய்வை நான் மேற்கொண்டேன். அந்த நியமங்களின் கீழ் வருகின்ற எனது பொறுப்புகள் எனது அறிக்கையில் நிதிக் கூற்றின் கணக்காய்வுக்கான கணக்காய்வாளரின் பொறுப்புகள் என்ற பிரிவில் மேலும் விவரிக்கப்பட்டுள்ளன. கணக்காய்வின் நிமித்தம் எனக்கு கிடைத்த கணக்காய்வு சான்றுகள் எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கு ஒரு அடிப்படையை வழங்குவதற்கு போதுமானதாகவும் பொருத்தமானதாகவும் இருப்பதாக நான் நம்புகின்றேன்.

**1.3 நிலையத்தின் 2022 ஆம் ஆண்டிற்கான வருடாந்த அறிக்கையில் உள்ளடக்கப் பட்டுள்ள ஏனைய தகவல்கள்**

இந்த கணக்காய்வு அறிக்கையின் திகதிற்குப் பின்னர் வழங்கப்படும் என எதிர்பார்க்கப்படும் இந்த நிலையத்தின் 2022 ஆண்டிற்கான அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள ஆனால் நிதிக் கூற்றுக்களிலும், எனது கணக்காய்வு அறிக்கையிலும் உள்ளடங்கப்படாத தகவல்கள் ஏனைய தகவல்கள் எனப் பொருள்படும். இந்த ஏனைய தகவல்களுக்கு முகாமைத்துவம் பொறுப்பேற்க வேண்டும்.

நிதிக் கூற்றுக்களுக்கான எனது அபிப்பிராயத்தில் இந்த ஏனைய பிற தகவல்கள் உள்ளடக்கப்படவில்லை. மேலும் எந்த உறுதிப்படுத்தலையும் செய்யவில்லை அல்லது எந்த வகையிலும் அது தொடர்பாக எந்த அபிப்பிராயத்தையும் நான் தெரிவிக்கவுமில்லை.

நிதிக் கூற்றுக்கள் தொடர்பான எனது கணக்காய்வை பொறுத்தவரை, மேலே இனங்காணப்பட்டுள்ள ஏனைய பிற தகவல்கள் கிடைக்கும்போது அவற்றைப் வாசிப்பதும், அவ்வாறு வாசிக்கும் போது, அந்த ஏனைய தகவல்கள் நிதிக் கூற்றுக்களுடன் அல்லது கணக்காய்வில் நான் பெற்ற எனது அறிவுக்கு முரணாக உள்ளதா அல்லது வேறுவிதமாக உள்ளதா என்பதைக் கருத்தில் கொள்வதும் எனது பொறுப்பாகும்.

நிலையத்தின் 2022 ஆம் ஆண்டு அறிக்கையைப் வாசிக்கும் போது, ஏதேனும் குறிப்பிடத்தக்க தவறான கூற்றுக்களை நான் கவனித்தால், அவற்றை சரிசெய்ய கட்டுப்பாட்டு தரப்பினருக்குத் தெரிவிக்க வேண்டும். மேலும் ஏதேனும் தவறான பிழைகள் கண்டறியப்பட்டால், அரசியலமைப்பின் பிரிவு 154(6) இன் பிரகாரம் அவை பாராளுமன்றத்தில் காலக் கிரமத்தில் சமர்ப்பிக்கப்படும் அறிக்கையில் உள்ளடக்கப்படும்.

**1.4. <u>நிதிக் கூற்றுக்களின் மீது முகாமைத்துவத்தினதும் கட்டுப்பாட்டு தரப்பினதும் பொறுப்புகள்</u>**

அரச துறைக் கணக்கீட்டு நியமங்களின்படி இந்த நிதிக் கூற்றுக்களை தயாரித்து வழங்க தேவையான உள்ளகக் கட்டுப்பாட்டு பொறிமுறையைத் தீர்மானிப்பது முகாமைத்துவத்தின் பொறுப்பாகும், ஏனெனில் அத்தகைய கூற்றுக்கள் மோசடி அல்லது பிழை காரணமாகப் பொருண்மையான தவறான கூற்றுகளிலிருந்து விடுபடலாம் என்பதாகும்.

நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதில், நிலையம் நிலைத்திருப்பதற்கான சாத்தியக் கூறுகளைத் தீர்மானிப்பது முகாமைத்துவத்தின் பொறுப்பாகும். முகாமைத்துவம் தனது நிறுவனத்தை மூடுவதற்கு அல்லது மாற்றுவழிகள் இல்லாதபோது அதன் செயற்பாடுகளை நிறுத்துவதற்கு நினைத்தாலொழிய, நிகழ் அபிப்பிராயத்தின் அடிப்படையில் கணக்குகளைப் பேணுவதும் மற்றும் நிலையம் நிலைத்திருப்பது பற்றிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

நிதியத்தின் நிதி அறிக்கையிடும் செயல்முறைப் பொறுப்பை, கட்டுப்படுத்தும் தரப்பினர் ஏற்க வேண்டும்.

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் பிரிவு 16 (1) இன் பிரகாரம், வருடாந்த மற்றும் காலாண்டு நிதிக் கூற்றுக்களை தயாரிக்க உதவும் வகையில், அதன் அனைத்து வருமானம், செலவுகள், சொத்துக்கள், பொறுப்புகள் தொடர்பான புத்தகங்களையும் மற்றும் பதிவுகளை முறையாகப் பேணுவதும் நிலையத்தின் பொறுப்பாகும்.

1.5 **நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு மீது கணக்காய்வாளரின் பொறுப்பு**

நிதிக் கூற்றுக்கள் ஒட்டுமொத்தமாக மோசடி அல்லது பிழை காரணமாக ஏற்படக் கூடிய கணிசமான தவறான கூற்றுக்களிலிருந்து விடுபட்டுள்ளனவா என்பது தொடர்பாக நியாயமான உத்தரவாதத்தை பெறுவதும், எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளரின் அறிக்கையை வெளியிடுவதும் எனது நோக்கமாகும். நியாயமான உத்தரவாதம் என்பது உயர் மட்ட உத்தரவாதமாகும். எனினும், இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க நடத்தப்படும் ஒரு கணக்காய்வு, அது இருக்கும்போது எப்போதும் ஒரு குறிப்பிடத்தக்க தவறான கூற்றை கண்டறியும் என்பதற்கு உத்தரவாதம் அல்ல. மோசடி அல்லது பிழை காரணமாக தவறான கூற்றுக்கள் எழலாம், மேலும் இந்த நிதிக் கூற்றுக்களின் அடிப்படையில் பயனர்கள் எடுக்கும் பொருளாதார ரீதியான முடிவுகளில் தனித்தனியாகவோ அல்லது ஒட்டுமொத்தமாகவோ செல்வாக்கு செலுத்தும் என நியாயமாக எதிர்பார்க்கப்பட்டால் அவை முக்கியமானதாகக் கருதப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் ஒரு கணக்காய்வின் ஒரு பகுதியாக, நான் தொழில்முறை தீர்ப்பைப் பயன்படுத்துகிறேன். மேலும் எனது கணக்காய்வு முழுவதும் தொழில்முறை சந்தேகத்தையும் நான் பேணுகின்றேன். பின்வருவனவற்றையும் நான் மேற்கொண்டுள்ளேன்:

- எனது முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கு ஒரு அடிப்படையை வழங்குவதில், நிதிக் கூற்றுக்களில் மோசடி அல்லது பிழைகள் காரணமாக போதுமான தவறான கூற்றுக்கள் நிகழக்கூடிய அபாயத்தைக் கண்டறிந்து மதிப்பிடுவதற்காக, ஒரு முறையான கணக்காய்வு நடைமுறை திட்டமிடப்பட்டு செயற்படுத்தப்பட்டது. மோசடியின் தாக்கம், பிறழ்கூற்றினால் ஏற்படக் கூடிய பொருண்மையான தவறான கூற்றுக்களின் தாக்கத்தை விட அதிகமாக உள்ளது, ஏனெனில் அவை கூட்டு, மோசடி, வேண்டுமென்றே விடுபடுதல்கள், தவறான பிறழ்கூற்றுக்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டை மீறுதல் ஆகியவற்றால் ஏற்படுகின்றன.

- உள்ளக் கட்டுப்பாட்டு செயல்திறன் பற்றிய அபிப்பிராயத்தை வெளிப்படுத்தும் நோக்கத்திற்காக இல்லாவிட்டாலும், சூழ்நிலைகளுக்கு ஏற்ற கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாடு குறித்த புரிதல் பெறப்பட்டது.

- பிரயோகிக்கப்பட்டுள்ள கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடு, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தால் செய்யப்படும் உரிய வெளிப்படுத்தல்கள் என்பன மதிப்பீடு செய்யப்பட்டன.

- கணக்கீடு தொடர்ச்சியான நிலையத்தின் அடிப்படையைப் பயன்படுத்துவதன் பொருத்தம், நிகழ்வுகள் அல்லது நிபந்தனைகள் நிறுவனத்தின் தொடர்ச்சியான நிறுவனமாகத் தொடரும் திறன் குறித்த குறிப்பிடத்தக்க நிச்சயமற்ற தன்மையை ஏற்படுத்தியுள்ளதா என்பதற்கு கிடைத்த கணக்காய்வுக்கான சான்றுகளின் அடிப்படையில் தீர்மானிக்கப்பட்டது. குறிப்பிடத்தக்க நிச்சயமற்ற தன்மை இருப்பதை அவதானித்தால், நிதிக் கூற்றுக்களில் உரிய வெளிப்படுத்தல்களுக்கு எனது கணக்காய்வாளர் அறிக்கையில் கவனம் செலுத்த வேண்டும். மேலும் அத்தகைய வெளிப்படுத்தல்கள் போதுமானதாக காணப்படாததாகவிருந்தால், எனது அபிப்பிராயத்தை மாற்றிக் கொள்ள வேண்டும். எனினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிபந்தனைகள் நிலையம் நிலைத்திருப்பதை முடிவுக்குக் கொண்டுவரலாம்.

- நிதிக் கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கம், வெளிப்படுத்தல்கள் என்பன அடங்கலாக, நிதிக் கூற்றுக்களின் ஒட்டுமொத்த விளக்கம், அடிப்படை பரிவர்த்தனைகள் மற்றும் நிகழ்வுகளின் பொருத்தமான மற்றும் நியாயமான உள்ளடக்கங்கள் என்பன மதிப்பிடப்பட்டன.

எனது கணக்காய்வின் போது இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புகள், உள்ளகக் கட்டுப்பாட்டின் முக்கிய பலவீனம் மற்றும் பிற விடயங்கள் என்பவற்றை கட்டுப்பாட்டில் உள்ள தரப்பினரின் கவனத்திற்குக் கொண்டு வந்துள்ளேன்.

## 2. ஏனைய சட்ட மற்றும் ஒழுங்குறுத்துகைத் தேவைகள் பற்றிய அறிக்கை

2.1 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டம் பின்வரும் விடயங்கள் தொடர்பான விஷேட ஏற்பாடுகளை உள்ளடக்கியது.

2.1.1 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் பிரிவு 12 (அ) இல் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளுக்கு இணங்க கணக்காய்வுக்கு தேவையான தகவல்களையும் விளக்கங்களையும் நான் பெற்றேன். மேலும் எனது பரிசீலைகளில் காட்டப்பட்டுள்ளபடி நிலையம் சரியான நிதி பதிவுகளைப் பேணியுமுள்ளது.

2.1.2 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் பிரிவு 6 (1) (ஈ) (iii) இல் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளுக்கு இணங்க, நிலையத்தின் நிதிக் கூற்றுக்கள் முந்தைய ஆண்டுடன் ஒத்துப்போகின்றன.

2.1.3 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் பிரிவு 6 (1) (ஈ) (iv) இல் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளுக்கு இணங்க, முந்தைய ஆண்டில் என்னால் வழங்கப்பட்டுள்ள சிபாரிசுகள் இந்த நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

2.2 ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள நடைமுறைகளுக்கும், கிடைத்திருந்த உண்மையான விடயங்களுக்கான சான்றுகளுக்கும் இணங்க பின்வரும் கருத்துக்களை கூறக் கூடியளவுக்கு எதுவும் எனக்கு தென்படவில்லை.

2.2.1 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் பிரிவு 12 (ஈ) இல் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளுக்கு இணங்க, நிலையத்தின் முகாமைத்துவ சபை குழுவின் உறுப்பினர் ஒருவர், நிலையத்தை உள்ளடக்கிய எந்தவொரு ஒப்பந்தம் தொடர்பாகவும், வழக்கமான வணிகப் போக்கிற்கு வெளியே, நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ நலன் முரண்பாடுகளைக் கொண்டுள்ளார்.

2.2.2 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் எண் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் பிரிவு 12 (உ) இல் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளுக்கு இண்ஙக, பின்வரும் அவதானிப்புகள் தவிர, எந்தவொரு உரிய எழுத்திலான சட்டத்திற்கு அல்லது நிலையத்தின் முகாமைத்துவ சபை வழங்கிய ஏனைய பொதுவான அல்லது விஷேட உத்தரவுகளுக்கு இணங்காத நடைமுறைகள் உள்ளன.

| விதிமுறைகளுக்கான/பணிப்புரைகளுக் கான குறிப்பு | விபரங்கள் |
|---|---|
| (அ) 2014 மே 30 ஆம் திகதிய 14/2014 ஆம் இலக்க மற்றும் 2018 ஜூலை 31 ஆம் ஆம் திகதிய 18/2018 ஆம் இலக்க பொது நிருவாக சுற்றறிக்கைகள் மற்றும் தாபனக் விதிக்கோவையின் பிரிவு XLVIII 13.1. | விசாரணைக் குழுவினால், பணிப்பாளர் நாயகம் மற்றும் பிரதிப் பணிப்பாளர் நாயகம் (ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி) அடங்கலாக 6 அதிகாரிகளுக்கு எதிராக எந்தவொரு குறித்த தகவலோ அல்லது தவறான நடத்தை குறித்த சந்தேகமோ இல்லாமல் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டன. மேலும், சுற்றறிக்கைகளுக்கு முரணாக விசாரணைக் குழுவிற்கு மொத்தம் ரூ. 4,035,135 கொடுப்பனவுகள் வழங்கப்பட்டுள்ளன. அத்துடன் போக்குவரத்து வசதிகளை வழங்குவதற்காக ரூ. 1,170,209 கொடுப்பனவுகளும் செலுத்தப்பட்டுள்ளன. |
| (ஆ) தாபனக் விதிக்கோவையின் பிரிவு XLVIII 13.1. | பிரதிப் பணிப்பாளர் நாயகம் (ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி) தவறான நடத்தைக்கு குற்றவாளியாகக் கண்டறியப்படாமல், தலைவராலும் மற்றும் பணிப்பாளர் சபையாலும் 2022 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 07 ஆம் திகதி முதல் கட்டாய விடுமறையில் அனுப்பப்பட்டார். அதற்கு எதிராகப் பிறப்பிக்கப்பட்டிருந்த நீதிமன்ற உத்தரவின் மூலம் மீண்டும் பணியில் அமர்த்தப்பட்டதால், சம்பளமாக ரூ. 1,008,160 தொகையும் மற்றும் சட்டக் கட்டணமாக ரூ. 75,000 தொகையும் எந்த சேவையையும் பெறாமல் செலுத்தப்பட்டிருந்தன. |
| (இ) 2021ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 16 ஆம் திகதிய பொதுத் தொழில்முயற்சிகள் பற்றிய செயற்பாட்டு வழிகாட்டல்கள் கைந்நூலின் பந்தி 6.6 | மீளாய்வு ஆண்டிற்கான நகல் வருடாந்த அறிக்கை, நிதியாண்டு முடிவடைந்து அறுபது நாட்களுக்குள் கணக்காய்வாளர் நாயகத்திடம் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும் என்றிருந்தாலும், அந்த அறிக்கை 2023 ஆம் ஆண்டு மே மாதம் 10 ஆம் திகதியான கணக்காய்வு திகதியிலும் கூட சமர்ப்பிக்கப்படவில்லை. |

2.2.3. 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் பிரிவு 12 (எ) இன் பிரகாரம், நிலையத்தின் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகள் என்பவற்றுக்கு முரணான வகையில் நிலையம் செயற்பட்டுள்ளது.

2.2.4. 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் பிரிவு 12 (ஏ) இன் கீழ் தேவைப்படுத்தப்பட்டுள்ளவாறு, நிலையத்தின் நிதிகள் கால வரையறைகளுக்குள் உரிய சட்டங்களின்படி விவேகமான, திறமையான மற்றும் பயனுள்ள முறையில் பெறப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளன.

## 3. ஏனைய விடயங்கள்

(அ) முக்கிய செலவுகளுக்காக வழங்கப்படும் மூலதன மானியங்கள், உரிய ஆண்டிலேயே செலவிடப்படுதல் வேண்டும். மேலும் ஏதேனும் தொகை எஞ்சியிருந்தால், அந்த நிதியிலிருந்து ஏற்படும் என எதிர்பார்க்கப்படும் செலவுகளை வெளியிடுதலும் வேண்டும். மீளாய்வு ஆண்டிலும் முந்தைய ஆண்டுகளிலும் இந்த நிலையத்திற்கு வழங்கப்பட்டிருந்த மூலதன மானியங்களில் ரூ. 8,551,327 மீதமுள்ள போதிலும், அந்த தொகையில் இலிருந்து எதிர்பார்க்கப்படும் செலவுகள் வெளியிடப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வு ஆண்டு காலப்பகுதியில், தகவல் தொழில்நுட்பப் பிரிவு ரூ. 2,217,600 விலையில் "Hardware Fire wall watch Guard fire box 290" இன் ஒரு அலகை கொள்வனவு செய்தது. நிலையத்தின் சராசரி மாதாந்த தேவை 40Mbps எனக் குறிப்பிடப்பட்டிருந்தது. மேலும் மேலே கொள்வனவு செய்யப்பட்டிருந்த "Hardware Fire wall watch Guard fire box 290" உபகரணங்களின் மாதாந்த கொள்ளளவு 5.5 Gbps (5500 Mbps) ஆகும். எனவே, கொள்வனவு செய்யப்பட்டிருந்த உபகரணங்கள் மாதாந்த தேவையை விட 5460Mbps அதிகளவு கொள்ளவுடைய ஒரு சாதனமாகும். விநியோக நிறுவனம் வழங்கிய இதே போன்ற இயல்புடைய முந்தைய உபகரணங்களை 2016-2022 காலகட்டத்தில் மட்டுமே பயன்படுத்த முடியுமாக இருந்தது. மேலும் 2022 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்ய புதிய Fire Wall முறைமை 2021 ஆம் ஆண்டில் தயாரிக்கப்பட்டதால், இந்த முறைமையையும் 2029 ஆம் ஆண்டில் அல்லது அதற்குப் பின்னர் அகற்ற வேண்டியிருக்கலாம். அடுத்த 06 ஆண்டுகளில் இந்த வலையமைப்பு முறைமையின் பயன்பாடு 5460Mbps ஆக அதிகரிக்கும் என எதிர்பார்க்கப் படுகிறது. இது சாத்தியமில்லை என்பதால், மேற்குறித்த தேவையான அளவை விடவும் அதிக கொளளவுடைய உபகரணங்களுக்கு தேவையற்ற விதத்தில் பணம் செலவிடப்பட்டுள்ளமை கவனிக்கப்பட்டது.

(இ) உள்நாட்டு கைத்தொழிலின் அபிவிருத்திற்கு மேலும் தொழில்நுட்பசார் இன்குபேட்டர் சேவைகளை வழங்க வேண்டிய தேவை இந்த நாட்டில் அதிகமாக இருந்தபோதிலும், ரூ.103,423,406 மதிப்புள்ள 14 உயர் திறன் கொண்ட உயர் தொழில்நுட்ப இயந்திரங்கள், நிலையான சொத்துக்கள் பதிவேட்டில் உள்ளடக்கப்படாத ரூ.13,250,000 மதிப்புள்ள ஒரு இயந்திரம் மற்றும் பெறுமானம் மதிப்பிடப்படாத மற்றொரு இயந்திரம் ஆகியவை செயலற்றதாகவோ அல்லது பயன்படுத்தப்படாமலோ இருந்தன.

(ஈ) ஆசிய அபிவிருத்தி வங்கி கடன் திட்டத்தின் கீழ் 2001 ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில் ரூ. 26,488,211 செலவிலும் 2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளில் ரூ. 10,441,338 செலவிலும் கொள்வனவு செய்யப்பட்ட 2,500KG கொள்திறனுடைய NCC அரைக்கும் இயந்திர உபகரணங்கள் பழுதுபார்க்கப்பட்டதன் பின்னர், 2017 ஆம் ஆண்டில் ரூ. 26,150,497 செலவில் குறைந்த கொள்திறனுடைய (2200 KG) மற்றொரு NCC அரைக்கும் இயந்திரம் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. அந்தளவான பணத்தை செலுத்தி கொள்வனவு செய்யப்பட்ட மற்றொரு இயந்திரம் முதல் இயந்திரத்திற்கு தேவையான பணிகளை செய்வதற்குக் கூட போதுமான நிலையில் இல்லை என்பது அவதானிக்கப்பட்டது.

(உ) நிலையத்தின் மனிதவள முகாமைத்துவ பணிப்பாளர் 2022 ஆம் ஆண்டு பெப்ருவரி மாதம் 07 ஆம் திகதி முதல் எந்தப் பணிகளும் ஒப்படைக்கப் படாமல் கைத்தொழில் பூங்காவிற்கு இடமாற்றப்பட்டிருந்தார். மேலும் 2022 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 17 ஆம் திகதி முதற்கட்ட விசாரணை அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருந்தாலும், 2023 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 06 ஆம் திகதியான கணக்காய்வு திகதி வரை குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்படாமல் ரூ. 3,047,473 பயனற்ற செலவு சம்பளமாக செலுத்தப் பட்டுள்ளது.

(f) கருத்திட்டங்களின் பொருளாதார நிலை, தொழிலாளர்களை எவ்வாறு பெறுவது மற்றும் நிதியை எவ்வாறு பெறுவது போன்ற பிரச்சினைகள் குறித்து முறையான முன்-சாத்தியக்கூறு ஆய்வுகளை மேற்கொள்ளாமல் கருத்திட்டங்களை ஆரம்பித்ததால், பின்வரும் கருத்திட்டங்கள் இடையில் நிறுத்தப்பட்டிருந்தன.

i. கூரை ஓடு நெய்யும் இயந்திரத்தை உருவாக்குதல், கடலோர கழிவுகளை அகற்றும் இயந்திரத்தை வடிவமைத்தல் மற்றும் அபிவிருத்தி செய்தல் மற்றும் கால்வாய்களில் இருந்து கழிவுகளை அகற்றுவதற்கான ஒரு படகை வடிவமைத்தல் மற்றும் அபிவிருத்தி செய்தல் ஆகியன தொடர்பான 03கருத்திட்டங்கள் நிதியைப் பெற முடியாததால் பின்னர் இடையில் நிறுத்தப்பட்டிருந்தன. அவ்வாறு நிறுத்தப்பட்ட நேரத்தில் 03கருத்திட்டங்களுக்கான மதிப்பீடு ரூ. 11,500, 000ஆக இருந்த போதிலும் உண்மையான செலவு ரூ. 5,674, 005இருந்தது. மீதி நிதி கிடைக்கததால் கருத்திட்டங்கள் இடையில் நிறுத்தப்பட்டிருந்தன.

ii. மரக்கறி வகைகளையும் மற்றும் பழவர்க்கங்களையும் எடுத்துச்செல்லும் வகையில் புகையிர வண்டிப் பெட்டிகள் வடிவமைப்பு மாற்றம் மற்றும் செயல்திறன் மதிப்பீட்டிற்கான AE&MD/RES/10/2021, தெதுரு ஓயாவில் மதகுகளை நிர்மாணிப்பது தொடர்பான ENED/RES/39/2022, மருத்துவ மாதிரிகளை கொண்டு செல்வதற்கான நியூமேடிக் குழாய் அமைப்புகளை வடிவமைப்பது தொடர்பான N/MED/CRES//NHSL/30/2018 - 03 கருத் திட்டங்கள் மீளாய்வு ஆண்டின் இறுதிக்குள் ரூ. 2,954,000 தொகை மதிப்பிடப்பட்ட செலவில் ரூ. 1,734,795 செலவை செய்ததன் பின்னர் இடையில் நிறுத்தப்பட்டன.

iii. தகவமைப்பு கட்டுப்பாட்டு ஸ்மார்ட் அலுவலகம்/ஸ்மார்ட் கட்டிடங்கள் தொடர்பான RED/RES/29/2020 ஆம் இலக்க மற்றும் ஒண்ட்ராய்டு மொபைலைப் பயன்படுத்தி நிகழ்நேர கண்காணிப்பு மற்றும் படப் பிடிப்புக்கான பாதுகாப்பு ரோபோ தொடர்பான N/MD/RES/85/2017-1/2018 ஆம் இலக்க இரண்டு கருத்திட்டங்கள் - கட்டம் 2 குழுப்பணி ஊழியர்கள் விலகியமை மற்றும் பொறியியல் ஊழியர்கள் பற்றாக்குறை ஆகிய காரணங்களினால் நிறுத்தப்பட்டுள்ளன. மேலும் கைவிடப்பட்ட நேரத்தில் ரூ. 1,345,345 செலவிடப்பட்டுள்ளது. இது மதிப்பிடப்பட்ட செலவான ரூ. 1,140,000 தொகையை விட அதிகமாகும்.

iv. பண்ணை அளவிலான பழங்கள் மற்றும் காய்கறிகளுக்கான குளிர்பதன் களஞ்சிய முறைமை குறைந்த செலவில் உருவாக்குவது தொடர்பான ENED/RES/41/2020-01 ஆம் இலக்க கருத்திட்டமானது ரூ. 2,900,000 மதிப்பிடப்பட்ட செலவில், 2020 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் ஆரம்பிக்கப்பட்டு ரூ. 615,683 செலவழித்த பிறகும் நடைமுறையில் இருந்தது. அதே நோக்கத்துடன் மற்றொரு ENED/RES/PD/35/2022 ஆம் இலக்க கருத்திட்டமும் 2022 ஆம் ஆண்டு பெப்ருவரி மாதத்தில் ரூ. 4,000,000 மதிப்பிடப்பட்ட செலவில் ரூ. 538,579 செலவு செய்த பின்னர் கருத்திட்டத்தின் எதிர்கால செயல்திறனை மதிப்பிடாமல் தொடங்கப் பட்டது. அந்தக் கருத் திட்டமும் ஆய்வு நேரத்தில் செயலற்ற நிலையில் இருந்தது.

டப்ளியூ.பி.சி. விக்ரமரட்ன
கணக்காய்வாளர் நாயகம்



# 13

# கணக்காய்வாளர் நாயகத்தின் கணக்காய்வு அறிக்கை தொடர்பாக பணிப்பாளர்கள் சபையின் அவதானிப்புகள்

## 03. கணக்காய்வு விசாரணைகள் தொடர்பாக எடுத்த நடவடிக்கைகள் மற்றும் கணக்காய்வு அறிக்கைகளில் சுட்டிக்காட்டிய பிழைகளை சீராக்குதல்

2022 ஆம் ஆண்டிற்கான கணக்காய்வாளர் நாயகத்தின் கணக்காய்வு அறிக்கையில் எழுப்பிய கணக்காய்வு விசாரணைகள் தொடர்பாக எடுத்த சரியான நடவடிக்கைகள் தெளிவுபடுத்தல்கள் பற்றிய விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

## 02. ஏனைய சட்ட மற்றும் பணிப்புரை தேவைப்பாடுகள் பற்றிய அறிக்கை

### 2.2.2 சட்டங்கள், ஒழுங்குவிதிகள், விதிமுறைகள், முகாமைத்துவ தீர்மானங்கள் முதலிவற்றுடன் ஒவ்வாமை

(a) தாபன விதிக்கோவையின் SLVIII 13.1 ஆம் பிரிவு மற்றும் குறித்த 14/2014 மற்றும் 18//2018 ஆம் இலக்க 2014 ஆம் ஆண்டு மே மாதம் 30 ஆம் திகதிய மற்றும் 2018 ஆம் ஆண்டு ஜுலை மாதம் 31 ஆம் திகதிய நிருவாக சுற்றறிக்கைகள்

பணிப்பாளர் நாயகமும் மற்றும் பிரதிப் பணிப்பாளர் நாயகமும் (ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி) அடங்கலாக 6 உத்தியோகத்தர்கள் குறித்த தகவல்களை அல்லது தவறான நடத்தையின் ஏதாவது சந்தேகத்தை கண்டறியாமல் விசாரணைக் குழுக்கள் நியமிக்கப்பட்டு விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டன. குறித்த சுற்றறிக்கைகளுக்கு முரணாக 4,035,135 ரூபாவும் மற்றும் 1,170,209 ரூபாவும் முறையே கொடுப்பனவுகளாகவும் மற்றும் போக்குவரத்து வசதிகளாகவும் செலவு செய்யப்பட்டிருந்தன.

**நிறுவனத்தின் ஒட்டுமொத்த தலைமைத்துவம் தொடர்பாக பணிப்பாளர்கள் சபைக்கு கிடைத்த தகவல்கள் தொடர்பாக அமைச்சு மட்டத்தில் ஒரு விசாரணையை நடத்துவதற்கு** 2022.01.25 **ஆம் திகதிய** 01-1 **ஆம் கட்ட மற்றும்** 2022.01.27 **ஆம் திகதிய 2 ஆம் கட்ட சபை கூட்டத்தின் போது தீர்மானிக்கப்பட்டுள்ளது.** NERDC **நிலையத்தின் முகாமைத்துவம் வழங்கிய பணிப்புரைக்கு மேலதிகமாக விசாரணைக் குழுவின் உறுப்பினர்களுக்கு தகசாந்திகளும், வதிவிடங்களிலிருந்து நிறுவனத்திற்கு வந்து செல்வதற்கான போக்குவரத்து வசதிகளும், காகிதாதிகளும் ஏனைய வசதிகளும் வழங்கப்பட்டன.**

(b) இலங்கை ஜனநாயக சோசலிஷக் குடியரசின் தாபன விதிக்கோவையின் XLVIII 31.1 ஆம் பிரிவு

பிரதிப் பணிப்பாளர் (ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி) தவறான நடத்தையின் குற்றத்தை கண்டறியாமல் தலைவரினாலும் மற்றும் பணிப்பாளர்கள் சபையினாலும் 2022 ஆம் ஆண்டு ஜுன் மாதம் 07 ஆம் திகதி முதல் கட்டாய லீவில் அனுப்பப்பட்டிருந்தார். அவரின் சேவையை பெறாமல் 1,008,160 ரூபா சம்பளமும் 75,000 ரூபா சட்டமுறையான கட்டணங்களும் செலுத்தப்பட்டிருந்தன. அவரை மீண்டும் சேவையில் அமர்த்துமாறு பிறப்பிக்கப்பட்டுள்ள ஒரு நீதிமன்ற கட்டளையினால் இந்த செலவுகள் பயனாற்றதாகவிட்டன.

**பிரதிப் பணிப்பாளர் நாயகம் (ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி) பொறியியலாளர் ஜே.ஏ.ஏ.டீ. ஜயசூரிய 2022.06.07 ஆம் திகதியிலிருந்து ஆறு மாத காலத்திற்கு பணிப்பாளர்கள் சபையினால் கட்டாய ஓய்வூதியத்தில் அனுப்பப்பட்டிருந்தார். அவர் சட்ட வழக்குத் தொடர்ந்ததையடுத்து அவர் 2022.11.21 ஆம் திகதியிலிருந்து மீண்டும் சேவையில் அமர்த்தப்பட்டுள்ளார். 2022.12.31 ஆம் திகதிய 2022/06 ஆம் இலக்க பொதுத் தொழில்முயற்சிகள் பற்றிய சுற்றறிக்கையையடுத்து ஓய்வுபெற்றுள்ளார். அவருக்கு உரித்தான அடிப்படை சம்பளமும் ஏனைய கொடுப்பனவுகளும் தற்பொழுது நீதிமன்ற கட்டளையின் பிரகாரம் வழங்கப்பட்டுள்ளன.**

| | | |
|---|---|---|
| (c) | 2022 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 16 ஆம் திகதிய 01/2022 ஆம் இலக்க அரச உடமை தொழில்முயற்சிகளுக்கான செயற்பாட்டு வழிகாட்டலின் 6.6 ஆம் பந்தி | நகல் வருடாந்த அறிக்கையின் ஒரு பிரதி நிதி ஆண்டு முடிவடைந்த பின்னர் அறுபது (60) நாட்களுக்குள் கணக்காய்வாளர் நாயகத்திற்கு சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். எனினும், அந்த அறிக்கையின் அத்தகைய ஒரு பிரதி கணக்காய்வு திகதியான 2023 ஆம் ஆண்டு மே மாதம் 10 ஆம் திகதியளவிலும் கூட சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |

**இறுதிக் கணக்குகள் தயாரிக்கப்பட்டதன் பின்னர்**, 2022 **ஆம் ஆண்டிற்கான வருடாந்த அறிக்கை தயாரிப்பு தற்பொழுது நிகழ்ந்து வருகின்றது. முடிவடைந்தவுடன் கூடுமான விரைவில் சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்படும். குறிப்பாக, நிறுவனத்தில் உள்ள நிறைவேற்றுநர் தரப் பதவிகளுக்கு ஆட்சேர்த்துக்கொள்வதில் தற்போதுள்ள தடைகள் இதனை தாமதப்படுத்தியுள்ளன.**

3. **ஏனைய விடயங்கள்**

(a) மூலதன செலவுகளின் நிமித்தம் ஒதுக்கிய மூலதன மானியங்கள் உரிய ஆண்டினுள் செலவு செய்யப்படுதல் வேண்டும். எஞ்சியிருக்கின்ற ஏதாவது தொகை எதிர்பார்த்த செலவுகளுடன் வெளிப்படுத்தப்படுதல் வேண்டும். எனினும், நிறுவனத்திற்கு வழங்கப்பட்டிருந்த மூலதன மானியங்களிலிருந்து மீளாய்வு ஆண்டிலும் மற்றும் முன்னைய ஆண்டிலும் ஒரு 8,551,327 ரூபா தொகை எஞ்சியிருக்கின்றது. அந்தத் தொகையிலிருந்து எதிர்பார்த்த செலவுகள் நிதிக் கூற்றில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

மூலதன நிதி ஒதுக்கீட்டை பெறுவதில் தாமதங்கள் நிலவிய போது, முன்னைய ஆண்டில் பயன்படுத்திய மூலதனம் நிதி ஆராய்ச்சி சார்ந்த செயற்பாடுகளில் அவசர தேவைகளை பூர்த்தி செய்யும் பொருட்டு பயன்படுத்தப்பட்டது. இவ்வாறு செய்ததன் மூலம், பல ஆராய்ச்சிக் கருத் திட்டங்களை எதிர்பார்த்த பலன்களுக்கு வினைத்திறனாக நகர்த்த முடிந்தது.

(b) மீளாய்வு ஆண்டு காலப்பகுதியில், 2,217,600 ரூபா செலவில் “மென்பாக ஃபையர்வோல் வொச் கார்ட் ஃபைர்பொக்ஸ்” அலகொன்றை IT பிரிவு கொள்வனவு செய்தது. கம்பனியின் மாதாந்த சராசரி Mbps தேவை 40Mbps என குறிப்பிடப்பட்டிருந்தது. இதே நேரம் ஃபைர்வோல் கருவி சாதனத்தின் மாதாந்த கொள்திறன் 5.5 Gbps (5500 Mbps) இற்கு அதிகம் என குறிப்பிடப்பட்டு இருந்தது. அதற்கிணங்க, கொள்வனவு செய்த அந்த கருவி சாதனத்தின் கொள்திறன் 5460 Mbps. இது நிறுவனத்தின் மாதாந்த தேவையை விஞ்சுகின்றது. அதே விநியோகத் தரப்பினால் வழங்கி முன்னர் பயன்படுத்திய கருவிசாதனமும் 2016 ஆம் ஆண்டு முதல் 2022 ஆம் ஆண்டு பாவனையில் இருந்தது. 2022 ஆம் ஆண்டில் வழங்கப்பட்டிருந்த புதிய ஃபயர்வோல் முறைமை 2022 ஆம் ஆண்டில் உற்பத்தி செய்யப்பட்டிருந்தது. ஆகையால், இந்த முறைமையை 2029 ஆம் ஆண்டில் அல்லது அதை அண்மித்த ஆண்டுகளில் மீளிடுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. ஆகையால், இந்த வலையமைப்பு முறைமையின் பாவனையானது அடுத்த ஆறு ஆண்டுகளில் 5460Mbps கொள்திறனினால் அதிகரிக்கும் என எதிர்பார்க்க முடியாது. மேலே குறிப்பிடப்பட்டு உள்ளவாறு தேவையான கொள்திறன் அளவை விஞ்சுகின்ற ஒரு கருவிசாதனத்திற்கு தேவை அற்ற ஒரு பணத் தொகை செலவு செய்யப்பட்டுள்ளமை அவதானிக்கப்பட்டது.

ஒரு ஃபைர்வோலை தெரிவுசெய்யும் போது அதிகாரமளிக்கப்பட்டுள்ள பாவனையாளர்களின் (உறுதிசெய்யப்பட்டுள்ள பாவனையாளர்கள்) எண்ணிக்கை முக்கியமானது. அந்த நேரத்தில் அநேகமாக 300 ஊழியர்கள் எமது நிறுவனத்தில் பணிபுரிந்து வந்தனர். அடுத்து வருகின்ற ஆண்டுகளில் புதிய ஆட்சேர்ப்புகள் அதிகரிக்கக்கூடும். பயன்படுத்தும் பாவனையாளர்களின் எண்ணிக்கையை கருத்திற்கொள்ளும் போது அது 500. இந்த நாட்டில் விற்பனை நிமித்தம் வகைப்படுத்திய ஃபயர்வோல்கள் பாவனையளர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப வேறுபடும். அது 200-1, 500-200, 2500-500, 2500~ வரை வேறுபடும். இதற்கு இணங்க, ஃபயர்வோலின் அதி கூடிய கொள்திறனும் (உள்கொள்திறன்) வேறுபடும். இங்குள்ள பாதுகாப்பு அம்சங்களுக்கு இணங்க கொள்திறனும் வேறுபடும். இந்த வகையிலான எல்லா புதிய உபகரணங்களும் அதிக கொள்திறன் வாய்ந்த பொதுவான ஒரு விதத்தில் உற்பத்தி செய்யப்படுகின்றன.

ஊழியர்களின் எண்ணிக்கையுடன் ஒப்பிடும் போது எமது நிறுவனம் மிகவும் வேகம் குறைந்த இன்டர்நெட் வசதியை பெற்றிருந்தாலும், தேவையான பாவனையாளர்கள் எண்ணிக்கைக்கு ஈடுகொடுப்பதற்கும் மற்றும் தேவையான குறைந்தளவு பாதுகாப்பு அம்சங்களை பூர்த்தி செய்வதற்கும் மிகவும் குறைந்த முக்கியமான கேள்வி விலை மனு தேர்ந்தெடுக்கப்பட்டு குறித்த சமர்ப்பித்த தகவுதிறன்களுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டுள்ளது. இந்த கருவிசாதனம் தொடர்பான அனுமதிப்பத்திரம் அடுத்த 6 ஆண்டுகளில் (2029) மீளப்பெறப்படும் என குறித்த உற்பத்தித் தரப்பு அறிவிக்கவில்லை.

(c) ஒரு மொத்தக் கொள்திறனுடைய 103,423,406 ரூபா பெறுமதியான 14 உயர் தொழில்நுட்ப இயந்திரங்கள் பொருட்பதிவேட்டில் உள்ளடங்குகின்றன. இவை தவிர, 13,250,000 ரூபா பெறுமதியான ஒரு இயந்திரமும் உள்ளது. இந்த இயந்திரம் ஆரம்பத்தில் நிலையான சொத்துப் பதிவேட்டில் பதியப்படவில்லை. உள்நாட்டு கைத்தொழிலை வலுப்படுத்த தொழில்நுட்ப பெருக்கப் பிரிவில் சேவைகளுக்கு அதிக கடுமையான கேள்வி நிலவியதால் இது உடனடியாக கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. பொருட்பதிவேட்டினுள் இனங்காணப்படாத மற்றொரு இயந்திரம் செயலிழந்து அல்லது பயன்படுத்தப்படாமல் இருந்துள்ளது.

எமது நாட்டில் புத்தாக்கத் தரப்புகளுக்கு முக்கியமாக ஆதரவளிப்பதை இலக்காகக்கொண்டு தொழில்நுட்ப பெருக்கப் பிரிவு 2018 ஆம் ஆண்டில் தாபிக்கப்பட்டது. 2018 ஆம் ஆண்டில், புத்தாக்குநர்கள் ஆணைக்குழுவின் கூட்டொத்துழைப்பில் புத்தாக்குநர்களுக்கு அத்தியாவசிய சேவைகளின் ஏற்பாட்டிற்கு அது வழிவகுத்தது. குறித்த இயந்திரம் தேவைக்கு ஏற்ப பயன்-படுத்தப்பட்டது. எதிர்பார்த்த ஏற்பாட்டிற்கான குறித்த இயந்திரங்கள் இனங்காணப்படாததால் தெளிவான ஒரு பதிலை வழங்குவது சவாலானதாகும். எனினும், கணக்காய்வு விசாரணையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளவாறு, எந்த இயந்திரங்களும் பயனற்று, பாவிக்கப்படாமல் அல்லது தகாமல் பயன்படுத்தப்பட்டது என கண்டறியப்படவில்லை.

(d) 2001 ஆம் ஆண்டு ஜுலை மாதத்தில், ஆசிய அபிவிருத்தி வங்கி கடன் கருத்திட்டத்தின் கீழ் 26,488,211 ரூபா பெறுமதிக்கு 2,500 KG கொள்திறனுடைய ஒரு CNC ஆலை இயந்திரம் கொள்வனவு செய்யப்பட்டது. 2014 ஆம் மற்றும் 2015 ஆம் ஆண்டுகளில் அது பழுதுபார்க்கப் பட்டது. துணைப்பாகங்களின் கொள்வனவு அடங்கலாக 10,441,338 ரூபா செலவாகியது. குறித்த பழுதுபார்ப்பு நிறைவடைந்த பின்னர், நிலையம் 2017 ஆம் ஆண்டில் குறைந்த (2,200 KG) கொள்-திறனுடைய மற்றொரு CNC ஆலை இயந்திரத்தையும் கொள்வனவு செய்தது. முதலாவது இயந்திரத்தின் மட்டுப்பாடுகளை கருத்திற்கொண்டு மற்றொரு இயந்திரத்தை கொள்வனவு செய்வதற்கு செலவு செய்த நிதிகள் வீணாகியுள்ளன.

அந்த நேரத்தில் அத்தியாவசியமாக இருந்ததால் புத்தாக்குநர்களுக்கு தொழில்நுட்ப உதவியை வழங்குவதற்கு 2017 ஆம் ஆண்டில் புத்தாக்குநர்கள் ஆணைக்குழுவின் கூட்டொத்துழைப்பில் இந்த தொழில்நுட்ப பெருக்கப் பிரிவு தாபிக்கப்பட்டது. தேவையான சேவைகளை வழங்கி உதவும் பொருட்டு புத்தாக்குநர்கள் ஆணைக்குழு தொழில்நுட்பப் பெருக்கப் பிரிவுக்கு ஒரு CNC ஆலை இயந்திரத்தை வழங்கியது. தொழில்நுட்ப பெருக்கப் பிரிவுக்கு சொந்தமான 20 ஆண்டுகள் பழைமை வாய்ந்த CNC ஆலை இயந்திரத்தினால் அவ்வப்பொழுது நிகழ்ந்திருந்த பிரச்சினைகளும் கருத்திற்கொள்ளப்பட்டன.

(e) நிலையத்தில் இருந்த மனித வள முகாமைத்துவப் பணிப்பாளர் 2022 ஆம் ஆண்டு பெப்ருவரி மாதம் 07 ஆம் திகதி முதல் செயல்வலுப்பெறும் வகையில் எந்தவிதமான கடமைப் பணிகளும் சாட்டப்படாமல் கைத்தொழில் பேட்டைக்கு இடமாற்றப்பட்டிருந்தார். 2022 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 17 ஆம் திகதி ஆரம்ப விசாரணை அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது. குற்றப் பகர்வுப்பத்திரங்களை சமர்ப்பிக்காமல் 2023 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 06 ஆம் திகதி வரை சம்பளமாக 3,047,473 ரூபா செலுத்தப்பட்டிருந்தது. இதனால் தொழிலாளர் ஆகுசெலவுகள் பயனற்றிருந்தன.

நிறுவனத்தின் முழு ஊழியர்களையும் உள்ளடக்கிய விசாரணை நடந்து கொண்டிருந்ததால், விசாரணையில் வெளிப்படைத்தன்மையை உறுதி செய்வதற்காக, இயக்குநர் (மனிதவளம்) 07.02.2022 முதல் தொழில்நுட்பத் துறைக்கு மாற்றப்பட்டார். விசாரணைக் குழு இந்த அதிகாரிக்கு எதிராக குற்றப்பத்திரிகையை வெளியிட்டது. அந்தக் குற்றப்பத்திரம் பணிப்பாளர்கள் சபையின் பணிப்புரைகளுக்கு இணங்க அவருக்கு 2023.04.27 ஆம் திகதி ஒப்படைக்கப்பட்டது.

(f) பின்வரும் கருத்திட்டங்கள் கருத்திட்ட சிக்கனம், ஊழியர் ஆட்சேர்ப்பு மற்றும் நிதிகளின் கிடைப்புத்தன்மை போன்ற முக்கிய விடய அம்சங்கள் பற்றிய முற்சாத்தியவள ஆய்வுகள் நடத்தப்படாமல் ஆரம்பிக்கப்பட்டதால் இடைநடுவில் நிறுத்தப்பட்டன.

i. பின்வரும் கருத்திட்டங்கள் கருத்திட்ட சிக்கனம், ஊழியர் ஆட்சேர்ப்பு மற்றும் நிதிகளின் கிடைப்புத்தன்மை போன்ற முக்கிய விடய அம்சங்கள் பற்றிய முற்சாத்தியவள ஆய்வுகள் நடத்தப்படாமல் ஆரம்பிக்கப்பட்டதால் இடைநடுவில் நிறுத்தப்பட்டன. இந்தக் கருத் திட்டங்களின் நிமித்தம் மதிப்பிடப்பட்டிருந்த ஆகுசெலவு 11,500,000 ரூபாவாகும். எனினும் இடைநிறுத்திய நேரத்தில், உண்மையாக செலவு செய்யப்பட்டிருந்த தொகை 5,674,005 ரூபாவாகும். அதனையடுத்து, நிதிகளை பெற இயலாதிருந்ததால் குறித்த கருத்திட்டங்கள் இடைநடுவில் நிறுத்தப்பட்டன.

ஓட்டு உற்பத்தித் தொழிலாளர்கள் சங்கத்தினதும், கைத்தொழில் வணிக அமைச்சினதும் வேண்டுகோளின் பேரில் இந்தக் கருத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. உருக்குலைவினால் ஓடுகள் 20% வீதம் வீணாதல், மழை காலங்களில் உலர்த்தும் காலம் மேலதிகமாக செல்லல், தொழிலாளர்களுக்கு பாதுகாப்பற்ற பணி சூழல் முதலியன போன்ற ஓடுகளை பாரம்பரிய ரீதியில் உலர்த்தும் செயல்முறையின் பிரதிகூலங்களை குறைப்பது இதன் பிரதானமான குறிக்கோளாகும். NERDC நிலையம் தயாரித்த வடிவமைப்பை ஓட்டு உற்பத்தியாளர்கள் ஏற்றுக்கொண்டதால் அவர்கள் தேர்ந்தெடுத்த ஒரு ஓட்டுத் தொழிற்சாலையில் குறித்த உலர்த்தி நிறுவப்படவில்லை. குறித்த உலர்த்தியை இயங்கச்செய்து களப் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டபோது உலர்த்தும் நேரம் குறைவாக மற்றும் உருக்குலைவினால் ஏற்படும் வீணாதல் குறைவாக இருந்த விடயம் அவதானிக்கப்பட்டு உறுதிசெய்யப்பட்டது. இந்த செயலாற்றுகை தொடர்பான ஒரு ஆராய்ச்சி ஆவணம் வெளியிடப்பட்டது. ஆனாலும், உலர்த்தியிலிருந்து தட்டுக்களை வெளியே எடுத்தும் மற்றும் உலர்த்தியில் தட்டுக்களை நகர்த்தியும் அந்த உலர்த்தியில் காணப்படும் ஓடுகளுடன் கூடிய திணிக்கும் தட்டுக்களை பொறிமுறைப்படுத்தி மேம்பாடுகளை மேற்கொள்வது அவசியம் என இந்த உலர்த்தியின் வணிக செயற்பாட்டில் அவதானிக்கப்பட்டது.

இந்த நோக்கத்தின் நிமித்தம் 2.5 மில்லியன் ரூபா கைத்தொழில் மற்றும் வணிக அமைச்சிடமிருந்து கோரப்பட்டது. ஓட்டு உற்பத்தித் தொழிலாளர்கள் சங்கத்தின் பிரதிநிதிகள் கைத்தொழில் மற்றும் வணிக அமைச்சினது செயலாளருடன் பேச்சுவார்த்தைகளை நடத்தினாலும், அந்த அமைச்சு நிதிகளை வழங்க இயலாது என அறிவித்திருந்தது. ஆகையால், இந்தக் கருத்திட்டங்களை தொடர்ந்து முன்னெடுக்க முடியவில்லை.

ii. அதிர்வு ஆய்வுக்கான புகையிரதப் பெட்டி வடிவமைப்பு திருத்தம் மற்றும் செயலாற்றுகை மதிப்பீட்டிற்கான ENED/RES/39/2022 ஆம் இலக்க கருத்திட்டம், அதிர்வை குறைத்து தொலை அதிர்வு உணர்கருவிகளை (தெதுரு ஒயாவில் காணப்படும் ரெடியல் கதவுகள்) செயற்படுத்துவதற்கான AE&MD/RES/10/2022 ஆம் இலக்கக் முறையியல்களின் தழுவல் கருத்திட்டம் மற்றும் கிளினிக் மாதிரிகளை ஏற்றியிறக்குவதற்கு உரிய நியூமேடிக் குழாய் முறைமைக்கான N/MED/CRES/NHSL/30/2018 ஆம் இலக்க கருத்திட்டம் ஆகிய மூன்று கருத்திட்டங்கள் இடைநடுவில் இடைநிறுத்தப்பட்டன. மதிப்பிடப்பட்டிருந்த 2,954 ரூபா ஆகுசெலவில் 1,734,795 ரூபா செலவு செய்த பின்னர் மீளாய்வு ஆண்டு இறுதியளவில் இது நிகழ்ந்துள்ளது.

மரக்கறி வகைகளையும் மற்றும் பழ வர்க்கங்களையும் ஏற்றியிறக்குவதற்கான புகையிரதப் பெட்டிகளின் ஏற்பாடுகளுக்கான AE - MD/RES/10/ 2022 ஆம் இலக்க கருத்திட்டத்தின் 1 ஆம் கட்டப் பணி, செய்துகொள்ளப்பட்டிருந்த ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்கு (புஒ) இணங்க, தேசிய பொறியியல் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிலையத்தினாலும் (NERDC) தேசிய அறுவடைக்குப் பின்-முகாமைத்துவ நிறுவகத்தினாலும் (NIPHM) மேற்கொள்ளப் பட்டு நிறைவேற்றப்பட்டது. வடிவமைப்பின் பின்னர், அறிக்கை NIPHM நிறுவகத்திற்கு ஒப்படைக்கப்பட்டது. இந்த செயற்பாட்டின் நிமித்தம் காகிதாதிகளுக்கு என 1530.00 ரூபா செலவு செய்யப்பட்டுள்ளது.

தெதுரு ஒயாவின் வாண்வழிக் கதவு அபிவிருத்திக் கருத்திட்டத்தின் பூர்வாங்க ஆய்வுகள் ENED/RES/39/2022 ஆம் இலக்கக் கருத்திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டன. மேலும் புஒ தொடர்பாக அனுப்பிய கடிதத்திற்கு அரசாங்கத் தொழிற்சாலையிலிருந்து பதில் ஏதும் கிடையாததால், 2023.02.23 ஆம் திகதி NERDC நிலையத்தில் நடைபெற்ற விஷேட கூட்டத்தில் குறித்த கருத்திட்டத்தை மூடுவதற்கு தீர்மானிக்கப்பட்டது.

N/MED/CRES/NHSL/30/2018 ஆம் இலக்கக் கருத்திட்டத்தின் பூர்வாங்க ஆராய்ச்சி சார்ந்த செயற்பாடுகள் நிறைவு செய்யப்பட்டன. அத்துடன் செயலாற்றுகைகள் வளர்ந்து வருகின்ற முன்மாதிரியின் மூலம் கையளிக்கப்பட்டன. செயற்படுத்துகைத் திட்டம் அடங்கலாக தகவு திறன்கள், ஆகுசெலவு மற்றும் விவரங்கள் என்பன உள்ளடங்கிய ஒரு அறிக்கையும் உரிய வைத்தியசாலை அதிகாரிகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டது. எமது நாட்டில் நிலவியிருந்த பொருளாதார நிலைமையினுள் இந்தக் கருத்திட்டத்தை தொடர்ந்து முன்னெடுக்கக்கூடிய சாத்தியமில்லை என்பதை புரிந்துகொண்டு ஒப்பந்தத்திற்கான இரண்டு தரப்புகளினதும் இணக்கத்தின் பேரில் குறித்த கருத்திட்டம் மூடப்பட்டது.

iii. தழுவக்கூடிய கட்டுப்பாடுடைய நேர்த்தியான அலுவலக / நேர்த்தியான கட்டிடக் கருத் திட்டம் (RED/RES/29/2020) மற்றும் அன்ட்ரோய் மோபைலை பயன்படுத்தி உண்மையான நேர கண்காணிப்புக்கும் கொள்ளலுக்குமான ஒரு பாதுகாப்பு ரோபோ கருத்திட்டக் கட்டம் 02 (N/MD/RES/85/2017-1/2018) ஆகிய இரண்டு கருத்திட்டங்கள் பணிக்குழுவில் இருந்த அலுவலர்கள் பதவி விலகியமை மற்றும் பொறியியல் பதவியணியில் நிலவிய பற்றாக்குறை ஆகியவற்றின் காரணமாக இடைநடுவில் நிறுத்தப்பட்டன. இவை கைவிடப்பட்டிருந்த நேரத்தில் மதிப்பிடப்பட்டிருந்த 1,140,000 ரூபா ஆகுசெலவை விஞ்சி ஒரு 1,345,345 ரூபா தொகை செலவு செய்யப்பட்டிருந்தது.

RED/RES/29/2020 ஆம் இலக்க நேர்த்தியான அலுவலக கருத்திட்டமானது இந்தக் கருத் திட்டத்திற்கு பொறுப்பாக இருந்த பொறியியலாளர் விலகிய பின்னர் பதில் நியமனம் செய்யப்பட்டதையடுத்து மூடப்பட்டது. இந்தக் கருத்திட்டத்தின் களப் பரிசோதனைகளின் நிமித்தம் கொள்வனவு செய்த பொருட்கள் இந்த நிலையத்தின் ஒரு அலவலகத்தில் பயன்-படுத்தப்பட்டன. கொள்வனவு செய்த ஏனைய இலத்திரனியல் மற்றும் மின்சார துணைப் பாகங்கள் மின்சார மற்றும் இலத்திரனியல் பொறியியல் பிரிவுக்கு ஒப்படைக்கப்பட்டன.

N/MD/RES/85/2017-1/2018 ஆம் இலக்க இந்தக் கருத்திட்டத்தின் 1-வது கட்டம் அது திட்டமிடப்பட்டவாறு நிறைவு செய்யப்பட்டது. இரண்டாம் கட்டம் அதன் ஒரு நீட்டிப்பாக ஆரம்பிக்கப்பட்டது. பொறியியலாளர் இரண்டாம் கட்டத்தின் போது நிறுவனத்தை விட்டு விலகிவிட்டார். NERDC நிலையத்திற்கு கிடைத்த தொழில்நுட்பத்தையும் வலிமையான வடிவமைப்புகளையும் கொண்டுள்ளது. பொருத்தமான ஆ-அ செயற்பாடுகளுக்கு இந்த தொழில்நுட்பங்களை எதிர்காலத்தில் பயன்படுத்தக்கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.

iv. உள்நாட்டில் வளரும் பழங்களினதும் மரக்கறி வகைகளினதும் தோல் பழுதடையாமல் இருக்கும் காலத்தை அதிகரிப்பதற்கு ஒரு விவசாயி மட்டத்திலான ஆகுசெலவு பயன் வாய்ந்த ஒரு குளிர் களஞ்சிய முறைமையை அபிவிருத்தி செய்வதில் இலக்குக்கொள்ளும் 2,900,000 ரூபா செலவில் மதிப்பிடப்பட்டிருந்த ENED/RE/41/2020-1 ஆம் இலக்கக் கருத் திட்டம் (கட்டம் 2) 2020 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் ஆரம்பிக்கப்பட்டது. எனினும் 615,683 ரூபாவை செலவு செய்த பின்னர் அந்தக் கருத்திட்டம் தற்பொழுது இயங்காத நிலையிலுள்ளது. முதல் கருத்திட்டத்தின் எதிர்கால செயற்பாட்டை கருத்தில் கொள்ளாமல் அதே நோக்கத்தை பகிர்ந்துகொள்கின்ற ENED/RES/PD/35/2022 ஆம் இலக்கக் கருத் திட்டத்தைக்கொண்டு மற்றொரு கருத்திட்டம் 4,000,000 மதிப்பிடப்பட்ட ஆகுசெலவில் 2022 ஆம் ஆண்டு பெப்ருவரி மாதத்தில் ஆரம்பிக்கப்பட்டது. பரிசோதனையை நடத்திய நேரத்தில் இந்தக் கருத்திட்டமும் 538,579 ரூபா செலவு செய்த பின்னர் தற்பொழுது இயங்காத நிலையிலுள்ளது.

ENED/RES/ 01-2020/41ஆம் இலக்கத்தின் கீழ் நடத்திய குளிர் களஞ்சிய முறைமை கருத் திட்டத்தின் களப் பரிசோதனைகள் அனுராதபுரத்தில் உள்ள அறுவடைக்குப்-பின்-தொழில் நுட்ப நிறுவகத்தில் மேற்கொள்ளப்பட்டன. அது வழங்கிய அறிக்கைக்கு இணங்க, தக்காளி மற்றும் கத்தரிக்காய் ஆகியவற்றின் தரத்தில் எந்தவித பிரச்சினைகளும் இருக்கவில்லை. அபிவிருத்தி செய்யப்பட்டுள்ள ஒரு குளிர் அறையை ஒத்த மற்றொரு குளிர் அறையின் நிர்மாணத்தின் நிமித்தம் மூன்றாம்நிலைக் கல்வி, ஆராய்ச்சி மற்றும் புத்தாக்கங்கள் மற்றும் திறன்கள் அபிவிருத்தி அமைச்சிலிருந்து கிடைத்த வேண்டுகோள் பேரில், சிறு அபிவிருத்தி பணிகள் பணிப்பாளர்கள் சபையின் அனுமதியுடன் ENED/RES/PD/35/2022 ஆம் இலக்க கருத்திட்டத்தின் கீழ் ஆரம்பிக்கப்பட்டன.

அதே நேரம், ENED/RES/41/2020-01 ஆம் இலக்கத்தின் கீழ் முன்னைய குளிர் அறைகளில் வித்தியாசமான மரக்கறி வகைகள் தொடர்பில் பரிசோதனை நடத்தப்பட்டவேளையில் சில செயலாற்றுகை விடயப் பிரச்சினைகள் கண்டறியப்பட்டதால், ENED/RES/PD/35/2022 ஆம் இலக்கக் கருத்திட்டம் நிறுத்தப்பட்டது. இந்த கருத்திட்டத்தின் கீழ் கொள்வனவு செய்த பொருட்கள் கணக்காய்வு செய்யப்பட்டன. குறித்த குளிர் அறைக் கருத்திட்டத்தின் மேலும் அபிவிருத்தியின் போது இந்த பொருட்களை பயன்படுத்த தீர்மானிக்கப்பட்டது.